Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 183

சனிக்கிழமை
28 மே 2022

வைகாசி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

முச்சந்தி முரளி



"கோழி மேய்ச்சாலும் கோர்ணமெந்தில மேய்க் கோணும் எண்ட காலம் மாறி, கோழியும் மேய்ச்சால் தான் கோர்ணமெந்து சம் எம் காணும் எண்ட நிலை வரப்போகுது போல..."

# அரச அலுவலர்களுக்கு ஊதியம் அதிகரிக்காது

## கைவிரித்தது பிரதமர் அலுவலகம்

கொழும்பு, மே 28

அரச அலுவலர்களின் ஊதியத்தை அதிகரிப்பது தொடர்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று பிரதமரின் ஊடகப்பிரிவு அறிக்கையிட்டுள்ளது.

15 >



## மிருசுவிலில் நேற்று கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், மே 28

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் நேற்று மாலை கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

மிருசுவில் பகுதியில் உள்ள காணியொன்றைத் துப்புரவு செய்த நபர், அங்கு சந்தேகத்

15 >

போலிக் கடவுச்சீட்டு விவகாரம்

## விமலின் மனைவிக்கு 2 ஆண்டுகள் சிறை!

கொழும்பு, மே 28

போலி ஆவணங்களைக் கொண்டு கடவுச்சீட்டு தயாரித்த குற்றச்சாட்டில், விமல் வீரவன்ஸவின் மனைவி சஷி வீரவன்ஸவுக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்

15 >

## விவசாய விநியோகச் சட்டம் விரைவில் முன்வைக்கப்படும்

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு
### நகர்ப்புற விவசாயத்துக்கும் நடவடிக்கை

கொழும்பு, மே 28

உணவு நெருக்கடிக்குத் தீர்வாகவும், விவசாயப் பொருள்களின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்வதற்காக அத்தியாவசிய விவசாய விநியோகச் சட்டம் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் என்று

15 >

## எரிவாயுப் பகிர்வுக்கு வந்தது பொறிமுறை

யாழ்ப்பாணம், மே 28

எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிப்பது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. அந்தப் பொறிமுறை ஊடகவே இனிவரும் காலங்களில் எரிவாயு பகிர்ந்

15 >

வட்டுக்கோட்டையில்

## இரு வயோதிபப் பெண்கள் சடலங்களாக நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், மே 28

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சகோதரிகளான, வயோதிபப் பெண்கள் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சங்கரத்தைப் பகுதியில் இருந்தே மேற்படி சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

திருநாவுக்கரசு புவனேஸ்வரி (வயது -77), விநாயக

15 >

## வடமராட்சிக்கு 33,000 லீற்றர் ம.எண்ணெய்

யாழ்ப்பாணம், மே 28

வடமராட்சிப் பகுதியில் உள்ள 4 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேற்றையதினம் 33 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

15 >

## டெங்குக் காய்ச்சலால் சிறுமி பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், மே 28

டெங்குக் காய்ச்சல் காரணமாக 5 வயதுச் சிறுமியொருவர் நேற்றுப் பரிதாபமாக உயிரிழந்தார். உடுவிலைச் சேர்ந்த பரசுதன் ஜோயிதா (வயது-5) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

குறித்த சிறுமிக்கு கடந்த 23ஆம் திகதி மாலை காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. பனடோல்

15 >

கச்சதீவு விவகாரம்

## மீனவர்களின் நிலைப்பாடே தமிழரசினதும் நிலைப்பாடு

யாழ்ப்பாணம், மே 28

கச்சதீவு விடயத்தில் மீனவர்களின் நிலைப்பாடே தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு. இந்த விடயத்தில் எமது

15 >



## இந்தியாவின் உதவித் திட்டம் முல்லையில் நேற்று ஆரம்பம்

முல்லைத்தீவு, மே 28

இந்தியாவின் மனிதாபிமான உதவித் திட்டங்களின் மூலம் வடக்கு மாகாண மக்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

15 >

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் பரிந்துரையுடன் 3ஆம் திகதியன்று '21' இறுதிப்படுத்தப்படும்!

சர்வ கட்சிக்கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, மே 28

அரசமைப்பின் 21ஆவது திருத்த வரைவு வெகுவிரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கு பிரதமர் தலைமையில் நேற்று நடைபெற்ற சர்வ கட்சிக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கட்சிகளின் பரிந்துரைகளுடன் எதிர்வரும் 3ஆம் திகதியன்று இந்தத் திருத்த வரைவு இறுதிப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15 >


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசாங்கத்தால் பொருளாதாரம் மீளும்

## அமெரிக்கத் தூதுவர் நம்பிக்கை

**கொழும்பு, மே 28**

**அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள புதிய பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தால் முடியும் என்று இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.**



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நாடாளுமன்றில் நேற்று முன்தினம் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

சந்திப்புத் தொடர்பான ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம். இலங்கை-ஐக்கிய அமெரிக்க நாடாளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் ஊடாக இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் மேம்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என்றும் தூதுவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றப் பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் மேற்கொள்ளும் பணிகளைப் பாராட்டிய அவர் நாடாளுமன்றில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் அவசியம் குறித்தும் கலந்துரையாடினார்.

இலங்கையில் ஜனநாயகத்தை வலுப்படுத்த ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் வழங்கிவரும் பங்களிப்புக்குச் சபாநாயகர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

சந்திப்பில் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கவும் கலந்து கொண்டிருந்தார்- என்றுள்ளது. (க-இ)

# கறுப்புச் சந்தையில் எரிவாயு 15,000 ரூபா

வவுனியா,மே 28

வவுனியாவில் சமையல் எரிவாயு கறுப்புச் சந்தைகளில் 15 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

மாவட்டத்துக்குக் கிடைக்கும் சமையல் எரிவாயு சிலிண்டர்களைப் பதுக்கும் சில விற்பனை முகவர்கள், அதனை வேறு இடங்களில் களஞ்சியப்படுத்தி, முச்சக்கரவண்டி சாரதிகளின் துணையுடன் 15 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்துவருகின்றனர்.

12.5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரே 15 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதுதொடர்பில் பாவனையாளர் அதிகாரசபையினரும் கவனம் செலுத்தவில்லை என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (க-110)

# மத்திய வங்கியின் நாணயச்சபைக்கு பொன்சேகாவை நியமிக்க இணக்கம்


கொழும்பு.மே 28

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் உறுப்பினராக அன்டனி நிஹால் பொன்சேகாவை நியமிப்பதற்கு, நாடாளுமன்றப் பேரவை இணங்கியுள்ளது என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமை யில் நடைபெற்ற நாடாளுமன்றப் பேரவைக் கூட்டத்திலேயே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அத்துடன் தரணி ஷிரந்தா விஜயதிலக, ஜயந்த எம். சுவாமிநாதன், ஏ.ஏ. மொஹமட் ஃபாத்திஹ் மற்றும் செல்லத்தம்பி சுமித்திரா ஆகியோரை இழப்பீடுகள் தொடர்பான அலுவலகத்தின் உறுப்பினர்களாக மீண்டும் நியமிப்பதற்கும் நாடாளுமன்றப் பேரவை இணங்கியுள்ளது என்று தம்மிக தசநாயக மேலும் தெரிவித்துள்ளார். (க-இ)

# இலங்கைக்கு நெருக்கடி ஜப்பான், இந்தியா உதவி



கொழும்பு.மே 28

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்க இந்திய மற்றும் ஜப்பானிய தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜப்பானிய பிரதமர் ஃபுமியோ கிஷிடா ஆகியோருக்கு இடையே குவாட் உச்சி மாநாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# கைப்பை பறித்தவர்கள் மக்களால் மடக்கிப்பிடிப்பு

சாவகச்சேரி, மே 28

இளம்பெண்ணின் கைப்பையைப் பறித்தவர்கள் மக்களால் நேற்று மடக்கிப்பிடிக்கப்பட்டனர்.

சாவகச்சேரி சந்தைக்கு வந்த பெண்ணைப் பின்தொடர்ந்த நால்வர் கைப்பையைப் பறித்துக்கொண்டு ஓட முற்பட்டனர். இதன்போது மோட்டார் சைக்கிளில் ஒருவர் தப்பியோட ஏனைய மூவரையும் மக்கள் மடக்கிப் பிடித்து சாவகச்சேரி நகரப் பொலிஸ் சாவடியில் ஒப்படைத்தனர். (ஒ-14,9)

# 300 கொள்கலன்களையும் விடுவித்தால் பொருள்களுக்கு தட்டுப்பாடு இருக்காது

## இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு.மே 28

கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ள சுமார் 300 கொள்கலன்களையும் உடனடியாக விடுவித்தால், எதிர்காலத்தில் சந்தையில் அத்தியாவசிய உணவுப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என்று அத்தியாவசிய உணவுப்பொருள்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்களின் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தக் கொள்கலன்களை விடுவிக்க அரசாங்கம் இதுவரையில் மாற்றுவழியை முன்வைக்கவில்லை.

கொள்கலன்களை விடுவிக்காவிடில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்று சங்கத்தின் செயலாளர் ஜி. இளமைநாதன் தெரிவித்துள்ளார். (க-இ)

# தவறானவருக்கு வாக்களித்ததன் விளைவை எதிர்கொள்கிறோம்

## பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு.மே 28

2019 ஆம் ஆண்டு ஊடகங்கள் ஊடாக உயர்த்தப்பட்ட ஒரு நபருக்கு பொதுமக்கள் வாக்களித்ததன் விளைவை இன்று எதிர்கொள்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். 2019 ஆம் ஆண்டில் பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கணிசமான அளவு குறைவாக இருந்தன. பாணின் விலை 50 ரூபா, எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை ஆயிரத்து 350 ரூபா, சிமெந்துப் பொதி ஒன்றின் விலை 850 ரூபா, ஒரு லீற்றர் டீசல் 120 ரூபா, ஒரு கிலோ அரிசி 100 ரூபாவுக்கும் குறைவாக விற்பனை செய்யப்பட்டன.

குறைந்தபட்ச பஸ் கட்டணமும் 12 ரூபாவாக இருந்தது. அதன் பின்னர் மக்கள் தவறான ஒருவருக்கு வாக்களித்து விளைவைப் பெற்றுள்ளனர்.

[illegible] அரசாங்கங்களின் தவ[illegible] என்றும் அவர் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எதிர்வரும் இரு மாதங்களில்

# மக்கள் பட்டினியால் இறக்கும் அபாயம்!

## வீட்டுத்தோட்ட செய்கையில் ஈடுபடுமாறு விவசாய ஒருங்கிணைப்பின் தலைவர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 28**

**அரசாங்கத்தின் தவறான விவசாயக் கொள்கையால் முழுவிவசாயத் துறையும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் எதிர்வரும் ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் மக்கள் பட்டினியால் உயிரிழக்கும் நிலை ஏற்படவுள்ளது. இதனை ஓரளவேனும் நிவர்த்திக்க பொதுமக்கள் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையில் இறங்கவேண்டும்.**

இவ்வாறு தேசிய விவசாய ஒருங்கிணைப்பின் தலைவர் அனுராத தென்னகோன் தெரிவித்தார்.

விவசாயத்துறை எதிர்கொண்டுள்ள மிக மோசமான நிலைமை, எதிர்வரும் காலங்களில் ஏற்படப் போகும் உணவுத் தட்டுப்பாடு தொடர்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அஸ்கிரிய மற்றும் மல்வத்துபீட மகாநாயக்க தேரர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் தவறான விவசாயக் கொள்கையால் விவசாயத்துறை மிக மோசமான நிலைமையை எதிர்கொண்டுள்ளது.

விவசாயத்தில் ஈடுபட தற்போது இரசாயன உரமும் இல்லை, சேதனப் பசளையும் இல்லை. விவசாயிகள் உரப்பற்றாக்குறையுடன் மேலதிகமாக தற்போது எரிபொருள் பிரச்சினையையும் எதிர்கொள்கின்றனர்.

டொலர் நெருக்கடி காரணமாக உணவுப் பொருள்களின் இறக்குமதியும் எதிர்வரும் காலங்களில் மட்டுப்படுத்தப்படலாம். தவறான சேதனப் பசளைத் திட்டத்தினால் பெரும்போக விவசாயத்தில் நெற்பயிர்ச்செய்கையின் விளைச்சல் 60 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. எதிர்வரும் காலங்களில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படப்போகிறது.

அதனை எதிர்கொள்ள அரசாங்கம் வெறும் பேச்சளவில் மாத்திரமே குறிப்பிட்டுக்கொள்கிறதே தவிர செயல் ரீதியில் முன்னேற்றகரமான வகையில் எவ்வித தீர்மானங்களையும் இதுவரையில் செயற்படுத்தவில்லை. உணவுத் தட்டுப்பாடு தீவிரமடைந்தால் எதிர்வரும் ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாத காலப்பகுதியில் மக்கள் உணவின்றி பட்டினியால் உயிரிழக்கும் அவல நிலைமை ஏற்படும். இந்த இடைக்கால அரசின் மீதான நம்பிக்கை அற்றுபோய்விட்டது. ஆகவே பொதுமக்கள் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையில் கட்டாயம் ஈடுபடுவது அத்தியாவசியமானது. எமக்கான உணவுப் பொருள்களை நாமே உற்பத்தி செய்துகொண்டாலேயே சவால்களை இயலுமான வரையில் எதிர்கொள்ளலாம்- என்றார். (ச-இ)



## பெற்றோல் தரையிறக்கம்

கொழும்பு,மே 28

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ள கப்பலில் இருந்து, பெற்றோலை தரையிறக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தற்போது 20 ஆயிரத்து 598 மெற்றிக் தொன் டீசல், ஆயிரத்து 778 மெற்றிக் தொன் சுப்பர் டீசல், 42 ஆயிரத்து 750 மெற்றிக் தொன் 92 ரக ஒக்ரேன் பெற்றோல், 6 ஆயிரத்து 579 மெற்றிக் தொன் 95 ரக ஒக்ரேன் பெற்றோல், 3 ஆயிரத்து 104 மெற்றிக் தொன் ஜெட் ஏ-1 ரக எரிபொருள் ஆகியன கையிருப்பில் உள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-இ)

# 4 மாதங்களான சினைப்பசுவை இறைச்சியாக்கிய கொடுமை

## கண்டுகொள்ளாத பொலிஸார்

யாழ்ப்பாணம்,மே 28

நான்கு மாதங்களான சினைப் பசுவைத் திருடி இறைச்சியாக்கி விற்பனை செய்துள்ள கொடூரச் சம்பவம் வலி.மேற்கில் இடம்பெற்றுள்ளது.

வயலில் கட்டப்பட்ட மாட்டை இரவோடிரவாகத் திருடியவர்கள் அதனை இறைச்சியாகியுள்ளனர்.

இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்குத் தெரியப்படுத்திய போதிலும் அவர்கள் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனையடுத்து தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொன்னாலையைச் சேர்ந்த மாட்டின் உரிமையாளர், நான்கு மாதங்களான சினைப்பசுவையும், ஏனைய மாடுகளுடன் வயலில் கட்டியிருந்தார்.

கடந்த சனிக்கிழமை சினைப்பசு காணாமற்போயிருந்தது. மறுநாள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொன்னாலை பெரியகுளத்துக்கு அண்மையில், நாகதம்பிரான் ஆலயத்துக்கு அருகே மாட்டின் தோல், மாடு கட்டப்பட்டிருந்த கயிறு, எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அயல் ஊரைச் சேர்ந்த சிலர் மாட்டை இறைச்சியாக்கி முச்சக்கரவண்டியில் இறைச்சியை ஏற்றிச்சென்று விற்பனை செய்தமை பின்னர் தெரியவந்தது.

அது தொடர்பான தகவல்களையும் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர்.

எலும்பு, தோல் என்பவற்றை வீட்டுக்குக் கொண்டுசென்று வைத்திருங்கள்.

நாங்கள் விசாரணை நடத்துகின்றோம் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

எனினும் அவர்கள் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இதனையடுத்து மாட்டின் உரிமையாளர் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார். (க-இ)




**இ**ண்டைக்கும் கொழும்பு அரசியல் பற்றித்தான் சொல்லவேண்டியிருக்கு. உவர் ஹரின் பெர்னாண்டோ இருக்கிறார் எல்லோ. சஜித்தை ஆட்சிக் கதிரையில ஏத்தாமல் நித்திரை கொள்ளமாட்டன் என்டெல்லாம் சபதம் போட்டவர்தான் இந்த ஹரின் பெர்னாண்டோ. ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு, சஜித் வெளியில வாறதுக்கும் இதே ஹரின் தான் கடுமையா வேலை பார்த்தவர். கிட்டத்தட்ட சஜித்தின்ர நிழல் எண்டு கூடச் சொல்லலாம். அப்பிடிப்பட்ட ஹரின், அமைச்சுப் பதவி கிடைக்கப் போகுதெண்டவுடன, 'சஜித்தாவது மண்ணாங்கட்டியாவது' எண்டிட்டு, ரணிலின்ர பக்கம் பாய்ஞ்சிட்டார். மூஞ்சூறு தான் போனதும் பத்தாமல் விளக்குமாத்தையும் கொண்டு போக ஆசைப்பட்ட மாதிரி, மனுஷ நாணயக்காரவையும் ஐக்கிய மக்கள் சக்தியில இருந்து கிளப்பிக் கொண்டு போட்டார் ஹரின்.

அமைச்சுப் பதவி எடுக்கேக்க 'அருவெருப்பில கோத்தாவின்ர முகத்தையே பாக்கேலை' என்டெல்லாம் ரீல் விட்டு, பிறகு இளிச்ச வாயோட வந்த போட்டோவால அவர் சொன்னதெல்லாம் பொய்யெண்டு தெரியவந்ததெல்லாம் வேற கதை. இப்ப என்னெண்டால், சஜித்தை விட்டிட்டு வந்தாலும் அவரைப் பற்றி நல்லமாதிரித்தான் ஊடகங்களுக்குச் சொல்லுறாராம். 'சஜித் எண்டைக்கோ ஒருநாள் இலங்கையை ஆளத்தான் போறார். ஆனால் இந்தமுறை அவர் பிரதமர் பதவியை ஏற்காமல் விட்டதுதான் பிழையான முடிவு' எண்டு சொல்லித் திரியிறாராம். அப்பிடி எதுக்கு சஜித்துக்கு இப்பவும் ஐஸ் வைக்கிறார்? காரணம் இருக்கு.

இப்பவே ரணிலில சனத்துக்கு கடுப்பு வந்திட்டு. ஒவ்வொருமுறையும் பொருள்கள் விலையேறேக்க சனங்கள் தங்கட கோபத்தை ஆட்சியில இருக்கிறவையிலதான் காட்டுவினம். அதால ரணிலுக்கு எதிராவும் கெதியில பெருமெடுப்பில போராட்டங்கள் வெடிக்கிற அறிகுறி இப்பவே தெரியுது. அப்பிடி ரணிலும் கவிண்டிட்டால், பிறகு சஜித்தை தான் பிரதமரா கொண்டுவர காரியங்கள் நடக்கும். அப்பிடி ஒருவேளை சஜித் வந்திட்டாலும், அவரின்ர பக்கம் பாய வசதியாத்தான், சஜித்துக்கு இப்பவும் ஹரின் ஐஸ் வைச்சபடி இருக்கிறாராம்.

ஒருபக்கம் சஜித்துக்கு நல்லபிள்ளை முகத்தை காட்டினாலும், இன்னொரு பக்கத்தால ஐக்கிய மக்கள் சக்தியை உடைக்கிற வேலையிலையும் ஹரின் இறங்கியிருக்கிறார். 'மச்சான் நீ வந்தால் உடன நிதியமைச்சு உனக்குத்தான். நீ வந்து பதவியை எடுத்து இலங்கைச் சனத்துக்கு உன்ர திறமையைக் காட்ட ஒரு சந்தர்ப்பம்' என்டெல்லாம், சிவனே எண்டு இருக்கிற ஹர்ஷ டி சில்வாவுக்கு வலை போட்டுக் கொண்டு இருக்கிறாராம் ஹரிஷ். ஹரின் போட்ட வலையில ஹர்ஷ டி சில்வா சிக்குவாரோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழும் பகுதியில் புத்தர் சிலை பிரதிஷ்டை

வவுனியா,மே 28

**தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் பகுதியான வவுனியா இலுப்பையடிப் பகுதியில் புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் மரம் ஒன்றின் கீழ் பிள்ளையார் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு பல வருடங்களாக வர்த்தகர்களும், வீதியால் செல்வோரும் வழிபட்டு வருகின்றனர்.**

இந்த நிலையில் இலுப்பையடிப் பகுதியில் அமைந்துள்ள வன்னி பௌத்த இளைஞர் சங்க அலுவலகத்துக்கு முன்பாக வீதியில் செல்வோர் தரிசிக்கும் வகையில் புதிதாக பீடம் நிறுவப்பட்டு, புத்தர் சிலை வைக்கப்பட்டு, மின் ஒளிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

குறித்த புத்தர் சிலை உள்ள பகுதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில், தொல்பொருள் திணைக்கள பிராந்தியக் காரியாலயத்தில் வீதியில் ஏற்கனவே புத்தர் சிலை உள்ள நிலையில், தற்போது புதிதாக புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளமை பௌத்த மயமாக்கலின் ஒரு பகுதியா என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வவுனியா, மன்னார் வீதியில் தமிழ் மக்களது குடிமனை உள்ள பகுதியில் இயங்கி வரும், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக வளாகத்திலும் புத்தர்சிலை வைக்கப்பட்டு பிரித்தோதுதல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (கு-இ)

# சிறுவர்கள் குறித்து தேசியக் கொள்கை

## தயாரிக்க கோபா குழு பரிந்துரைப்பு



கொழும்பு, மே 28

நாட்டில் சிறுவர்கள் தொடர்பில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஊடாக தேசியக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அதுதொடர்பில் உரிய வழிகாட்டல்கள் வழங்கப்படவேண்டும் என்று அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவான கோபா குழு வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றில், இரண்டாவது கூட்டத் தொடருக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கை குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண தலைமையில் கடந்த 20ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையிலேயே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதில், சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஊடாக இந்நாட்டு சிறுவர்கள் தொடர்பில் தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு உரிய வழிகாட்டல்கள் வழங்கப்படவேண்டும்.

இதுதொடர்பில் மாகாண சபைகளுக்கு நிதி வழங்குகையில் எவ்வித பாகுபாடுமின்றி நிதி வழங்குவதற்கு அமைச்சு தலையிடவேண்டும்.

அத்துடன், தேசிய கொள்கையைத் தயாரிக்கையில் சகல நீதிமன்ற வலயங்களுக்குள்ளும் நன்னடத்தை அலுவலகமொன்றை நிறுவுவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

சிறுவர்கள் தொடர்பாக ஏற்புடையதாகின்ற சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம் உள்ளிட்ட சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களைத் திருத்தும் தேவைப்பாடு ஏற்படின் சட்ட மூலங்களை காலத்துக்கு ஏற்றவகையில் திருத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இணையத்தள பயன்பாடு காரணமாக சிறுவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுகின்ற துஷ்பிரயோகங்களிலிருந்து அவர்களை மீட்பதற்கும் உரிய நடவடிக்கை செயன்முறையொன்றை நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தயாரிக்க வேண்டும் என அந்த அறிக்கையில் கோபா குழு பரிந்துரைத்துள்ளது. (ச-இ)



# முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழந்தால் நாட்டின் எதிர்காலம் நிலையற்றதாகும்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,மே 28

முதலீட்டாளர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்துதல், அவர்களைப் பாதுகாத்தல் அரசாங்கத்தின் பொறுப்பாகும். மாறாக முதலீட்டாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படுமாயின் அதன் விளைவை நாடே எதிர்கொள்ளும் என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கை முதலீட்டு சபையின் ஆடைத்தொழிற்சாலை பிரதானிகள் குழுவுடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் நடத்தினார். அது தொடர்பான ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ரூபாவின் பெறுமதி குறைந்துள்ள நிலையில், நாட்டுக்குள் டொலரைக் கொண்டுவருவதற்கான வழிமுறையை நோக்கி நகருவதற்கு, அரசியல் நிலைமை ஸ்திரமானதாக அமையவேண்டும்.

இலங்கைக்கு முதலீடாக டொலரைக் கொண்டு வரும் முதலீட்டாளர்களின் பிரச்சினைகள் ஒரே இடத்தில் மிகத் துரிதமாகத் தீர்க்கப்படுவதற்கு அவசியமான வழிமுறை மற்றும் ஒரு கட்டமைப்பு சார்ந்த நிறுவனம் அமையப்பெற வேண்டும். எனினும் இடைத்தரகர்களின் இடையூறு காரணமாக அவர்களது பிரச்சினைகளை குழப்பி விடுகின்ற முறைமையே இன்று காணப்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில் ஆடைத்தொழிற்றுறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. ஆடைத்தொழிற்றுறைக்கு புத்துயிர் அளிக்கத் தேவையான தலையீடுகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது - என்றுள்ளது. (க-இ)

# சாவகச்சேரியில் டிப்பர் மோதி காயமடைந்த முல்லை. அதிபர் உயிரிழப்பு



சாவகச்சேரி, மே 28

சாவகச்சேரி மருத்துவமனை முன்பாக கடந்த 25 ஆம் திகதி டிப்பர் மோதி காயமடைந்த முல்லைத்தீவு பாடசாலை அதிபர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு முத்தையன்கட்டு வலதுகரை முத்து விநாயகர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் கந்தையா சத்தியசீலன் (வயது-51) என்பவரே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது எதிரே வந்த டிப்பர் வாகனம் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் அதிபர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையிலே நேற்றுமுன்தினம் மாலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணையை யாழ்.போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ஓ-14,9,159)

# எரிபொருள் விலை அதிகரிப்பால் அருகில் பணியிடமாற்ற கோரல்

யாழ்ப்பாணம்,மே 28

எரிபொருள் விலை அதிகரிப்பை அடுத்து, வாழ்விடங்களுக்கு அருகில் உள்ள அலுவலகங்களுக்கு பணி இடமாற்றல் வழங்குமாறு திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அலுவலகங்களில் வெளிக்களப்பணியாற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட ஏனைய அலுவலர்களும் தற்போதைய எரிபொருள் விலை அதிகரிப்பால் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளனர். அதனால் தற்காலிக இடமாற்றலேனும் வழங்கி, வாரத்தில் இரு நாள்கள் கடமைக்கு வர அனுமதிக்குமாறும், சிலர் ஒத்துமாறல் இடமாற்றத்துக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-9)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்

## சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

கொழும்பு,மே 28

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் செய்திகளைச் சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மீது குண்டர்கள் சிலர் தாக்குதல் நடத்தியதை சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குருநாகல் மாவட்ட பிரதேச செய்தியாளர் அசோக சந்திரசேகர மற்றும் திருகோணமலை மாவட்ட பிரதேச செய்தியாளர் எம்.என்.எம். புஹாரி என்ற இரு ஊடகவியலாளர்களும் குண்டர்கள் சிலரால் தாக்கப்பட்டனர். அவர்களது கையடக்கத் தொலைபேசிகளும் பலவந்தமாகப் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. செய்தி அறிக்கையிடலை ஒரு தனிநபரோ அல்லது ஒரு குழுவோ சீர்குலைக்கும் அல்லது தடுக்கும் வகையில் செயற்படுவதானது, எரிபொருள் நிலையத்துக்குள் பொதுமக்களுக்கு விரோதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் கூட இருக்கலாம். ஆகவே முடியும்வரை குறித்த அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். ஊடகவியலாளர்களை அச்சுறுத்தித் தாக்கி அவர்களின் கையடக்கத் தொலைபேசிகளை பறிமுதல் செய்த குண்டர்களை உரிய முறையில் விசாரணை நடத்தி, அவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு பொலிஸ்மா அதிபரைக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் நெருக்கடி இந்தியா விசேட கவனம்

கொழும்பு,மே 28

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில், இந்தியா விசேட கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட, இந்தியாவின் புதிய வெளிவிவகாரச் செயலாளர் ஸ்ரீவினய் குவாத்ராவை புதுடில்லியில் உள்ள வெளிவிவகார அமைச்சில் சந்தித்தார்.

சந்திப்பில் இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இருதரப்பு உறவுகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இந்தியா இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு தூதுவர் நன்றி தெரிவித்தார். (க-இ)

*எரிபொருள் வீண்விரயம்:*

## பொதுபோக்குவரத்துச் சேவை விரைவில் மறுசீரமைக்கப்படும்

கொழும்பு, மே 28

எரிபொருள் பாவனையை மட்டுப்படுத்தும் நோக்கில் பொதுப்போக்குவரத்து சேவை விரைவில் மறுசீரமைக்கப்படும் என போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை புகையிரத தலைமையகத்தின் அதிகாரிகளுடன் புகையிரத தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் விநியோகத் தட்டுப்பாடு காரணமாக பொது மக்கள்பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

எரிபொருள் வீண்விரயத்தைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். தனியார் வாகனப் பயன்பாட்டைத் தவிர்த்து பொதுப் போக்குவரத்தை ஊக்குவித்தால் எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்கலாம்.

இதற்கென அரச பொதுப் போக்குவரத்துச் சேவையை விரைவில் மறுசீரமைக்க உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் - என்றார். (ச-இ)

## உணவு நெருக்கடி தொடர்பில் ஜூன் 2 இல் கலந்துரையாடல்

கொழும்பு, மே 28

எதிர்காலத்தில் முகங்கொடுக்க வேண்டியுள்ள உணவு நெருக்கடிக்கு தயார்படுத்தல் மற்றும் திட்டமிடல் என்பன தொடர்பில் , ஜனாதிபதியுடன் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி விசேட கலந்துரையாடல் நடத்தவுள்ளதாக சந்தை, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் கையிருப்பில் உள்ள அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களின் தொகை குறித்து தற்போது கணக்கிடப்பட்டு வருகின்றது.

இந்தக் கணக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர், நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படவேண்டிய அரிசி உள்ளிட்ட உணவுப் பொருள்களின் தொகை குறித்து தீர்மானிக்கப்படும் என்று உணவுப் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ-14.இ)

# இடைக்கால வரவு – செலவுத்திட்டத்தில் வரிகள் மீண்டும் அதிகரிக்கப்படும்

## பிரதமர் தெரிவிப்பு



கொழும்பு,மே 28

விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால வரவு - செலவுத்திட்டத்தில், அனைத்து வரி வீதங்களும் மீண்டும் அதிகரிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் ஆங்கில இணைய ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்துடனான முதற்கட்டப் பேச்சுக்கள் முடிவுக்கு வந்துள்ளன. சர்வதேச நாணய நிதியத்தால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கவையாகக் காணப்பட்டபோதிலும், எதிர்வரும் 2025 ஆம் ஆண்டாகும்போது வரவு - செலவு திட்டப்பற்றாக் குறையானது 2 வீதமாக இருக்க வேண்டும் என்று அவர்களால் வலியுறுத்தப்பட்டமை சிக்கலான விடயமாகவுள்ளது. குறிப்பாக 2023 ஆம் ஆண்டளவில் பெருமளவுக்கு பொருளாதார முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடியாத நிலைமையே காணப்படும் என்பதால் இது சிக்கலானதாக இருக்கின்றது. அதேபோன்று பொருளாதார மறுசீரமைப்பொன்றை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்தும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. எமது பொருளாதாரம் ஏற்றுமதிகளை மையப்படுத்தியதாக மாற்றப்படவேண்டும். அது மாத்திரமன்றி பொருளாதாரக் கட்டமைப்பிலும் குறிப்பிடத்தக்களவிலான மாற்றங்கள் அவசியமாகின்றன.

இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் வரிகள் அதிகரிக்கப்பட்டு பழைய நிலைக்குக் கொண்டு வரப்படும். இருப்பினும் கல்வித்துறை , சுகாதாரத்துறை ஆகியன தவிர்ந்த ஏனைய துறைகளுக்கான செலவுகளைக் குறைப்பதே வரவு-செலவுத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். அவ்வாறு அநாவசிய செலவினங்களைக் குறைப்பதன் மூலம் அவற்றை மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான சமூகம் சார் நடவடிக்கைகளுக்காகச் செலவிடமுடியும். தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக பெருமளவானோர் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் முகங்கொடுத்திருக்கும் துன்பத்தை என்னால் நன்கு புரிந்து கொள்ளமுடியும். அவர்களின் கோபத்தையும் என்னால் உணர முடிகின்றது. அநேகமானோர் ஒரு வேளை உணவை உண்ண முடியாத நிலையில் இருக்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்கள் முடிவுக்கு வந்ததன் பின்னர், சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம் எனத் தீர்மானித்திருக்கின்றோம். அவர்களிடம் கடன் மறுசீரமைப்பதற்கான கோரிக்கையை முன்வைப்போம். கடன் பொறிக்குள் நாம் சிக்கவில்லை. சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிடமிருந்து பெறப்பட்ட கடன்களின் அளவு ஒரே அளவானவையாகவே உள்ளன. ஆனால் சீனாவின் கடன்களுக்கான வட்டி வீதம் சற்றே உயர்வாகக் காணப்படுகின்றது - என்றார். (க-இ)

## எரிபொருள் பவுஸர் கவிழ்ந்து விபத்து

கொழும்பு, மே 28

குருநாகலில் எரிபொருள் பவுஸர் ஒன்று வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பில் இருந்து கிண்ணியா நோக்கி எரிபொருளை ஏற்றிக் கொண்டு சென்ற பவுஸரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

இதன்போது பெருமளவான எரிபொருள் கசிந்து வீணாகியுள்ளது எனவும் சீரற்ற கால நிலை காரணமாக வீதியில் சறுக்கி விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## சூரிய மின் உற்பத்தி ஊடாக மின்சார நெருக்கடிக்குத் தீர்வு

*ஜனாதிபதியின் ஆலோசனை*

கொழும்பு,மே 28

உலகின் பல நாடுகளில் சூரிய மின் உற்பத்தியே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. அதனைப் பின்பற்றி இலங்கையின் மின்சார நெருக்கடிக்கு விரைவான தீர்வாக கூரையில் பொருத்தப்பட்ட சோலர் அமைப்புகளைப் பயன்படுத்தவேண்டும் என்று ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை மின் உற்பத்திக்குப் பங்களிப்பதில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் வகையில் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பான ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டின் மொத்த மின் தேவையில் 70 வீதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களில் இருந்து உற்பத்தி செய்வது அரசாங்கத்தின் இலக்கு. இதுவரை சூரிய சக்தியில் இருந்து கிட்டத்தட்ட 700 மெகாவொட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் உள்ளது. ஆனால், இலங்கை மின்சாரசபை பொறியாளர்களின் எதிர்ப்பால் அது சாத்தியமாகவில்லை என்பது பொது மக்களின் கருத்து. அதனைச் சரிசெய்து நிலவும் மின்சார நெருக்கடிக்குத் தீர்வு காண நடைமுறை ரீதியாக உதவ முடியும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரதான மின் கட்டமைப்பில் தற்போது உள்ள கொள்ளளவின் அடிப்படையில் சுமார் ஆயிரம் மெகாவொட் புதிய மின் உற்பத்தியை சேர்க்க முடியும் என்று மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் (பரிமாற்றம்) பி.டப்ளியு. ஹெந்தஹேவா சுட்டிக்காட்டினார்.

கனிய எண்ணெயைப் பயன்படுத்தி ஒரு யுனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய 100 ரூபாவும், நிலக்கரியைப் பயன்படுத்தி ஒரு யுனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய 5 ரூபாவை விடவும் கூடுதலாக செலவிடப்படுகின்றது. மாறாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலத்தைப் பயன்படுத்தி வருடாந்தம் 300 பில்லியன் டொலரைச் சேமிக்க முடியும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க தெரிவித்தார். அனல் மின் உற்பத்திக்கு மாதம் 100 மில்லியன் டொலருக்கும் அதிகமாகச் செலவாகும். அதனால் தற்போதைய விலையில் மின்சாரம் வழங்குவது கடினமான பணியாக இருக்கும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பாடசாலைகள், மருத்துவமனைகள் உள்ளிட்ட அரச கட்டடங்களின் கூரைகளை சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிப்பதற்குப் பயன்படுத்துவதன் மூலம் பெருமளவிலான நிதத்தைச் சேமிக்கமுடியும் என்று சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார் - என்றார். (க-இ)

*அரசாங்கத்தரப்பினர் மீதான வன்முறை:*

## முப்படையினரும் ஏன் அமைதி காத்தனர்? விசாரணைக்கு மூவர் குழு நியமிப்பு

நாட்டில் மார்ச் 31 ஆம் திகதியில் இருந்து மே 9 ஆம் திகதி வரை இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக, முன்னாள் படைத்தளபதிகள் மூவர் அடங்கிய குழுவொன்றை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நியமித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் மிரிஹான இல்லத்துக்கு அருகில் இடம்பெற்ற கலவரம் மற்றும் அதன்பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து ஆராய இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. கடற்படையின் அட்மிரல் வசந்த கரன்னாகொட இந்தக் குழுவுக்கு தலைமை தாங்கவுள்ளார். ஜெனரல் தயாரத்நாயக்க மற்றும் விமானப் படையின் மார்ஷல் ரொஷான் குணதிலக்க ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

குறித்த சம்பவங்களுடன் தொடர்புடையோரிடம் இன்று முதல் விசாரணைகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 356 ஏக்கர் சிறுபோகம் மன்னாரில் ஆரம்பம்

மன்னார், மே 28
மன்னார் முசலி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அகத்திமுறிப்பு குளத்தின் கீழ் 356 ஏக்கரில் சிறுபோகம் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டது.
2022 ஆம் ஆண்டுக்கான சிறுபோக செய்கை அகத்திமுறிப்புக் குளத்தின் கீழ் 482 ஏக்கரில் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.
எனினும் டீசல் தட்டுப்பாடு, உரம் இல்லாத நிலை மற்றும் விவசாய செய்கைக்கு ஏற்படும் செலவு என்பவற்றாலேயே இந்த முறை குறைந்தளவில் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது என்று விவசாயிகள் தெரிவித்தனர். இதற்கான ஆரம்ப நிகழ்வாக நெற்செய்கைக்கு அகத்திமுறிப்புக் குளத்திலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.
நிகழ்வில் முசலி பிரதேச செயலர் சிவராஜி, மன்னார், வவுனியா மாவட்டங்களின் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நடராஜா யோகராஜா, சிலாபத்துறை பிரதேச நீர்பாசன பொறியியலாளர் எஸ்.மணிவண்ணன் உள்ளிட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.
(ஒ-14-60)

### வடக்கு மாகாணத்தில்

# தனியார் வேலைவாய்ப்பு 50 வீதம் வீழ்ச்சி ஏற்படும்

## வர்த்தக தொழிற்துறை மன்றம் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், மே 28**

**வடக்கு மாகாணத்தில் 2021 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் பெறப்பட்ட வியாபார நம்பிக்கை சுட்டெண் நிலைவரத்தின்படி, தனியார்துறை வேலைவாய்ப்பு 50 வீதம் வீழ்ச்சியடையும் என்று யாழ்.வர்த்தக தொழிற்துறை மன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.**

இலங்கையின் பொருளாதாரப் பின்னடைவு தொடர்பில் துறைசார்ந்தவர்களுடனான கலந்துரையாடலில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
வட மாகாணத்தில் நுண்ணிய, சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறையினர், இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் 4.6 வீதப் பங்களிப்பை வழங்கி வருகின்றனர். அரச தொழில் பெறுவதற்கு இளைஞர் சமூகம் அக்கறை செலுத்துகின்றமை, புதிய தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கான அனுமதிகள் தாமதமாகின்றமை மற்றும் வளங்கள் சரியான முறையில் அடையாளப்படுத்தப்படாமை போன்ற விடயங்கள் பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தைச் செலுத்துகின்றன.
இவ்வாறான பாதகமான தன்மைகளை முன்கூட்டியே சமாளித்துக் கொள்வதற்காக குறைந்த வட்டியில் கடனை முயற்சியாளர்களுக்கு அறிமுகம் செய்தல், மூலப்பொருள்களின் இறக்குமதியை அதிகரித்தல், மூலப்பொருள்களின் இறக்குமதிக்கான வரியைக் குறைத்தல், குறைந்த கட்டுப்பாடுகளுடன் வெளிநாட்டு உல்லாசப்பயணிகளை அனுமதித்தல், செயற்கை உரப் பாவனையை அனுமதித்தல் மற்றும் ஏற்றுமதிக்கான சந்தை வாய்பை அதிகரித்தல் போன்ற விடயங்களை மேற்கொள்வதன் மூலம் பொருளாதார ஆபத்தைக் குறைத்துக் கொள்ள முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
(க-159)

## மன்னார் எரிபொருள் நிலையத்தில் வெளிமாவட்ட குழுவால் குழப்பம்

மன்னார், மே 28
மன்னார் மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிலையங்களில் அமைதியான முறையில் எரிபொருள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும் வெளிமாவட்டத்திலிருந்து வரும் ஒரு குழுவால் குழப்ப நிலை தோன்றியுள்ளதாக மன்னார் மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.
அண்மையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,
மன்னாருக்கு ஏனைய மாவட்டங்களை விட ஓரளவு திருப்திகரமான முறையில் எரிபொருள் வரவழைக்கப்பட்டு திட்டமிட்டவாறு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.
பல பிரச்சினைகள் இருந்தாலும் மன்னார் மக்கள் பொறுமையுடன் இருந்து தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றபோதும் வெளி மாவட்டத்திலிருந்து தொழிலுக்கு வரும் ஒரு குழுவினர் எரிபொருள் நிலையங்களில் பிரச்சினைகளை உருவாக்கி குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர்.
இந்த குழுவினரின் வாகனம் மற்றும் ஆள் அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் காலத்தில் தொடர்ந்து மன்னாரில் இதுபோன்ற குழப்பநிலையை உருவாக்கினால் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் -என்றுள்ளது.
(ஒ-14-60)


## மழலைகளின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மே 28
தொல்புரம் மத்தி சனசமூக நிலைய சக்தி முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா நாளை பிற்பகல் 1.30 மணிக்கு சக்தி முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
சனசமூக நிலையத் தலைவர் கி.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொள்ளவுள்ளார்.
(ஒ-14)



## கிளிநொச்சி மாணவர்களுக்கு வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை

கிளிநொச்சி, மே 28
கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையால் மாணவர்கள் மத்தியில் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் மாணவர் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அன்றாடத் தேவைகளின் ஒரு பகுதியைக் குறைக்கும் வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது மாணவர்களுக்குப் பயிர்ச்செய்கை தொடர்பிலான கருத்தரங்கு கிளிநொச்சி மாவட்ட விவசாய போதானாசிரியர்களால் நடத்தப்பட்டது. அத்துடன் கனடாவில் வசிக்கும் ஏ.கந்தவேலின் நிதியனுசரணையில் மாணவர்களுக்கு நாற்றுக்களும் வழங்கப்பட்டன.
(ஒ-14-214)



யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேக தினமாகிய நேற்றுமுன்தினம் ஆலயத்தில் சகஸ்ரசங்காபிஷேகம் இடம்பெற்றது.
விசேட அபிஷேக பூஜைகளுடன் ஆரம்பமாகிய சகஸ்ரசங்காபிஷேகம் ஆயிரத்து 8 சங்குபூஜையுடன் சிறப்பாக இடம் பெற்றது.
(ஒ-14)



யாழ்.நெடுந்தீவிலுள்ள ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உள்ள பொருண்மியம் நலிவுற்ற 62 குடும்பங்களுக்கு பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவரால், வாழ்வாதார உதவியாக உலர் உணவுப் பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.
(ய-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## துணிந்து களமிறங்குங்கள்

சில தினங்களுக்கு முன்னர் மாவட்டச் செயலர்கள் மாநாடு இணையவழியில் இடம்பெற்றிருந்தது. இதன் போது கொழும்பு அமைச்சு அதிகாரிகள் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருந்தனர். 'போர்க் காலங்களில் பொருள்கள் விநியோகம் உள்ளிட்ட அனைத்தையும் வடக்கு – கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாவட்டச் செயலர்கள் திறம்பட ஒழுங்கமைத்தவர்கள். இப்போதைய நெருக்கடியில் அவர்களின் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்' என்று அவர்கள் கூறியிருந்தனர்.

ஆனால் இப்போதுள்ள நிலைமையில் இங்குள்ள எந்தவொரு மாவட்டத்திலும் விநியோகம் எதுவும் சீராக இல்லை. எல்லா இடங்களிலுமே குளறுபடிகளும், மாபியாக்களின் கைகளும்தான் ஓங்கியிருக்கின்றன. அதிலும் வடக்கு மாகாணத்திலேயே அதிகளவான மக்கள் தொகை கொண்ட யாழ்ப்பாணத்தின் நிலைமையோ இன்னும் மோசம்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலராக இருந்த திருமதி இமெல்டா சுகுமாரின் பிரியாவிடையின்போது அப்போதைய மேலதிக மாவட்டச் செயலராக இருந்த திருமதி ரூபினி வரதலிங்கம் குறிப்பிட்ட விடயத்தை இங்கு சுட்டிக்காட்டவேண்டும்.

''கொழும்பின் மாவட்டச் செயலர் யார் என்பது அந்த மாவட்ட மக்களுக்கே தெரியாது. ஆனால் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் யார் என்பது உலகத்துக்கே தெரியும். அந்தளவு தூரம் யாழ்ப்பாண மாவட்டம் எல்லோராலும் நோக்கப்படும் இடம். அதேபோன்று இங்குதான் பிராந்திய ஊடகங்களும் இருக்கின்றன'' என்று அவர் கூறியிருந்தார்.

அவ்வளவு உன்னிப்பாக கவனிக்கப்படும் யாழ்ப்பாண மாவட்டம் போர்க்காலமாக இருக்கலாம், ஏ – 9 வீதி மூடப்பட்ட காலமாக இருக்கலாம், எந்தக் காலத்திலும் உணவு, எரிபொருள், மருந்து விநியோகம் என்பனவற்றை கடந்த காலங்களில் திறம்பட ஒருங்கமைத்திருந்தது. ஆயுதத் தரப்புக்களின் நெருக்கடிகள் அழுத்தங்களுக்கு மத்தியில் அப்போதைய அதிகாரிகள் திறம்பட பணியாற்றியிருந்தார்கள்.

ஆனால் இன்று நவீன தொழில்நுட்பக் காலத்திலும் இன்னமும் மக்கள் எல்லாவற்றுக்கும் வரிசையில் நிற்பது தொடர்கின்றது. அதற்கு முடிவு கட்டுவதற்கு பொருத்தப்பாடான நடவடிக்கைகள் எவையும் விரைந்து எடுக்கப்படவில்லை. இது இன்னமும் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கும், மாபியாக்கள் முளைப்பதற்கும் மாவட்ட நிர்வாகம் இடமளிப்பதாகவே அமைகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு சீராகுவதற்கு இன்னும் வருடங்கள் தேவை. அதுவரை இவ்வாறான குளறுபடியான விநியோகம் தொடர்ந்தால் மக்கள் ஒரு கட்டத்தில் பொறுமையிழந்து வன்முறையை நாடும் அபாயமும் இல்லாமலில்லை. தென்னிலங்கைக் கலவரங்கள் ஆகப் பிந்திய எடுத்துக்காட்டு.

எனவே அதைத் தடுப்பதற்கும், எதிர்காலத்தில் உணவுப் பொருள்களுக்கான தட்டுப்பாடு ஏற்படும்போது அதனைக் கையாள்வதற்கும் இப்போதே உரிய பொறிமுறையை யாழ். மாவட்டச் செயலர் ஏற்படுத்தவேண்டும்.

கடந்த நெருக்கடி காலங்களில் பணியாற்றிய அதிகாரிகள் பலரும் இப்போதும் மாவட்டச் செயலகத்திலும், பிரதேச செயலகங்களிலும், மாகாணத்திணைக்களங்களிலும் இங்குதான் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் உதவிகளையும், ஆலோசனைகளையும் விரைந்து பெற்று தற்போதைய 'ஸ்மார்ட்' யுகத்துக்கு ஏற்றவாறான பொறிமுறையை உருவாக்கவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் விரைந்து – துணிந்து செயற்படுத்தவேண்டும். சவால்களை எதிர்கொண்டு மக்களை காப்பாற்றுவதற்கு அர்ப்பணிக்கவேண்டும். கடந்த காலங்களில் அவர் அரசியல் தரப்புக்களின் கைதியாக செயற்பட்டிருக்கலாம். ஆனால் இப்போது காலம் அதிலிருந்து அவரை விடுவித்து வருகிறது. யாழ்ப்பாண மக்களுக்கான சேவையைச் செய்ய அவருக்கு இப்போது காலம் வழங்கியிருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திச் செயற்படவேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

"வெற்றி என்பது புத்திசாலிகளுக்கு சொந்தமானது அல்ல. அது முன்னேற துடிக்கும் உழைப்பாளிக்கும், தன்னம்பிக்கை கொண்டவர்களுக்குமே சொந்தம்" - அடல்ஃப் ஹிட்லர்




# பொருளாதார மாநாடு நடத்த ரணில் திட்டம்

**கொழும்பு, மே 28**

**இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி நிலைமையை சமாளித்து, அரசியல், பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கான முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதற்கான வழி முறைகள் பற்றியும் ஆராய்ந்து வருகின்றார். உலக நாடுகளின் ஒத்துழைப்பு மற்றும் முதலீடுகளை பெறும் நோக்கில் 'பொருளாதார மாநாடு' ஒன்றை நடத்துவதற்கு பிரதமர் திட்டமிட்டுள்ளார்.**

இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தை முன்வைப்பதற்கு முன்னர் இது தொடர்பான அதிகார பூர்வ அறிவிப்பு வெளியாகும் என தெரியவருகின்றது.

இலங்கையில் பொருளாதார மறுசீரமைப்பு இடம்பெற்றால், உதவிகளை வழங்குவதற்கும், முதலீடுகளை செய்வதற்கும் தயார் என வெளிநாட்டு நிறுவனங்கள்கூட அறிவித்துள்ளன. எனவே, இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தின் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டங்களும் முன்வைக்கப்படவுள்ளன.

அதேபோல நன்கொடையாளர் மாநாடு, சுற்றுலாத்துறை மாநாடு உள்ளிட்ட ஏற்பாடுகளும் இடம்பெறவுள்ளன என்று தெரியவருகின்றது. (ஒ-இ)

# சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக இலங்கைக்கு பெரும் நிதி கிடைக்கும்

## நம்பிக்கை வெளியிட்டார் பிரதமர்

கொழும்பு,மே 28

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக, இலங்கைக்குப் பெரும் தொகையான நிதி கிடைக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச தரப்புகளுடனான பேச்சுக்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கைக்கு உலக வங்கி உதவிகளை வழங்கி வருகின்றது. பிற திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் அனைத்து நிதிகளும் பொருளாதாரத்தை புத்துயிர் பெறுவதை நோக்கிச் செலுத்தப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக இலங்கைக்கு நிதி கிடைக்கும். சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தப்பட்டு அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டு, அடிப்படை விடயங்களில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளன. அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இலங்கை உள்நாட்டில் வேலைத்திட்டமொன்றை வகுக்கும். அதனைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று மீண்டும் இலங்கைக்கு வந்து நாட்டின் திட்டங்களை ஆராய்ந்த பின்னர், ஓர் உடன்பாட்டை எட்டுவர். உக்ரைன் மோதல் மற்றும் உலகளாவிய பணவீக்கம் ஆகியவற்றால் 70 நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. குறைபாடுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வதையும், சாத்தியமான, அனைத்து ஆதரவையும் இலங்கை நாடவேண்டும் - என்றார்.

அதேவேளை அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போது நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் விசேட அறிக்கையொன்றை பிரதமர் வெளியிடவுள்ளார். (க-இ)

நாளை 29.05.2022 ஞாயிற்றுக்கிழமை வைகாசி 15

சுபநேரம் : 08.52 – 10.22

ராகுகாலம்: 04.22 - 05.52

கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





























# இளம்தலைமுறை வணிகத்தலைவர்களுக்கு...

APIIT BUSINESS SCHOOL ஆனது NESTL LANKA PLC உடன் இணைந்து APIIT அத்வெல என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

## APIIT ஓர் அறிமுகம்

APIIT Sri Lanka என்பது சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்ற இங்கிலாந்தின் Staffordshire பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் வணிகம், கணினி மற்றும் சட்டம் ஆகிய பட்டப்படிப்புகளை (இளங்கலை மற்றும் முதுகலை) மாணவர்களுக்கு வழங்கிவரும் ஒரு புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனமாகும். தற்போது ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமான மாணவர்கள் இங்கு கற்பதுடன் ஒவ்வொரு வருடமும் சுமார் 600 மாணவர்கள் பட்டப்படிப்புகளுக்கு பதிவு செய்கின்றனர். APIIT Sri Lanka இலங்கையில் பிரித்தானிய பட்டப்படிப்புகளை வழங்கும் ஒரு மிகப்பெரிய நிறுவனம் என்பதில் ஐயமில்லை. கடந்த 22 ஆண்டுகளில், 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆக்கபூர்வமான மற்றும் திறமையான பட்டதாரிகளை உருவாக்கி இலங்கையில் தனியார் உயர் கல்வித் தரத்தை மேம்படுத்தி சர்வதேச அளவு தரத்துக்கான ஓர் அளவுகோலை அமைத்துள்ளனர்.

வாழ்க்கையை மேம்படுத்தும் எதிர்காலத் தலைவர்களை உருவாக்குவதற்காக அவர்களுக்குச் சிறந்த கற்றலை வழங்கி கற்றலின் உள்ளார்ந்த மதிப்புத் தொடர்பில் ஆர்வத்தைத் தூண்டுவதன் மூலம் நாட்டின் உயர்கல்வி கற்றலில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதே APIIT Sri Lanka இன் நோக்கமாகும். இந்த நோக்கத்துக்காக APIIT Business School அதன் மாணவர்களை வேலைவாய்ப்பு ரீதியாகவும் வணிகரீதியாகவும் தொழில்முனைவோர்களாக மாற்ற உதவுகிறது. இங்கு வழங்கப்படும் பல்வேறு கற்றல் வாய்ப்புகளில் மாணவர்கள் ஈடுபடுவதன் மூலம் மாணவர்களை அவர்களின் எதிர்காலத்தில் போட்டி, ஆற்றல்மிக்க மற்றும் சவாலான பணிச்சூழலுக்கு ஏற்றவாறு தயார்ப்படுத்துகிறது.

## நிகழ்வின் கண்ணோட்டம்

APIIT இல் உள்ள ஒரு நிறுவன முன்னுரிமையானது, சமூகங்களை வளர்ப்பதன் மூலம் மாணவர்களின் திறமையை வளர்த்துக்கொள்ள அதிகாரம் அளிப்பதாகும். இந்த முக்கிய உறுதிப்பாட்டை நிறைவேற்றும் வகையில், APIIT BUSINESS SCHOOL ஆனது 2022ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதி கொழும்பில் APIIT அத்வெலவை அறிமுகப்படுத்தியது. APIIT அத்வெல பல்வேறு முக்கிய பங்குதாரர்களுடன் மதிப்பு உருவாக்கும் கூட்டாண்மைகளை ஆற்றுவதற்கான தொடர்ச்சியான திட்டமாக செயற்படுவதோடு கல்வியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி சமூகத்தில் உறுதியான தாக்கத்தை ஏற்படுத்தும்.

சிறிய அளவிலான வர்த்தகர்கள் மற்றும் நிறுவனங்களின் வியாபாரத்தை மேம்படுத்துவதற்காகவே NESTL LANKA PLC இணைந்து APIIT BUSINESS SCHOOL இன் APIIT அத்வெல திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆரம்பத் திட்டமானது NESTL LANKA PLC இன் பிரதிநிதிகள் APIIT BUSINESS SCHOOL இன் மாணவர்களுக்கு சிறு வர்த்தக வியாபாரத்தை நடத்துவதற்கான நடைமுறை அம்சங்கள் அதாவது வர்த்தகம், பங்குக்கட்டுப்பாடு மற்றும் செயற்பாட்டு மூலதன முகாமைத்துவம் போன்றவற்றைப் பயிற்றுவிப்பார்கள். இதற்கமைய ஒவ்வொரு மாணவரும் தங்கள் சுற்றுப்புறத்தில் உள்ள ஒரு தெருவின் அடிப்படையில் உள்ளூர் வர்த்தகருடன் இணைந்து அங்கே அமைந்திருக்கும் ஒரு சிறிய அளவிலான வர்த்தக மையத்தின் சில்லறை விற்பனையாளருக்கு மாறிவரும் நுகர்வோர் முறைகளுக்கு மத்தியில் நுகர்வோர் முறைகளை மாற்றி கேள்விகள் நிறைந்த வணிகச் சூழலில் போட்டித்தன்மையுடன் இருக்க எவ்வாறு வளங்களை மேம்படுத்துதல் மற்றும் செயற்பாடுகளை நிர்வாகித்தல் தொடர்பில் உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி அவர்களின் வணிகத்தை வெற்றிப்பெறச் செய்யவேண்டும்.

இத் திட்டம் குறித்து APIIT இன் தலைவர் பந்துல எகொடகே கருத்துத் தெரிவிக்கையில், "இத் திட்டம் அனைத்து திட்ட பங்குதாரர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டவொரு மதிப்பை உருவாக்குகிறது. ஏனெனில் மாணவர்கள் எங்கள் தொழில் கூட்டாண்மையாளரான NESTL LANKA PLC வழங்கும் பயிற்சியின் மூலம் சிறிய அளவிலான சில்லறை வணிகங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பது தொடர்பான அறிவையும் அனுபவத்தையும் கற்றுக் கொண்டு நடைமுறை தொழில் முனைவோர் திறன்களையும் வளர்த்துக் கொள்கின்றனர். அதே நேரத்தில், சில்லறை வணிகங்களில் மாணவர்கள் தங்கள் செயற்பாடுகளை மேம்படுத்த உதவுவதன் மூலம் சிறிய அளவிலான சில்லறை வணிக சமூகம் பெரிதும் பயனடைகின்றது' என்றார். NESTL LANKA PLC இன் சிரேஷ்ட துணைத் தலைவரும் விற்பனைப் பிரிவின் தலைவருமான ஜகத் வெடகே மற்றும் சர்வதேச அமைப்பின் சிரேஷ்ட பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் முதல் APIIT அத்வெல திட்டத்துடன் முன்னேற்றமடைவது பற்றி APIIT BUSINESS SCHOOL மாணவர்களுக்கு உரையாற்றினர். சில்லறை விற்பனையாளர் வணிக மேம்பாட்டுத் திட்டத்துக்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களை வழங்குவதற்காகவே BUSINESS SCHOOL மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிப்பதற்காக தொடர்ச்சியான மையப்படுத்தப்பட்ட பட்டறைகளை அவர்கள் ஏற்பாடுசெய்துள்ளனர்.

இந்தத் தொடக்க விழாவில் கலந்துகொண்ட 240 மாணவர்களிடம், NESTL LANKA PLC இன் சிரேஷ்ட துணைத் தலைவரும் விற்பனைப் பிரிவின் தலைவருமான ஜகத் வெடகே மேலும் தெரிவித்ததாவது, 'இந்த ஆக்கப்பூர்வமான அறிவுப் பரிமாற்றப் பாதையில் APIIT உடன் இணைந்து செயற்படுவதில் நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். அத்தோடு சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற எங்கள் நோக்கத்துக்கு ஏற்ப சிறிய அளவிலான சில்லறை விற்பனையாளர் சமூகம் வளர்ச்சியடைந்து சிறந்த வாழ்வாதாரத்தை அவர்கள் அடைவதற்கு ஆதரவளிக்கும் முகமாகவே இளைய தலைமுறை வணிகத் தலைவர்களுக்கு நாங்கள் பயிற்சி அளிக்கிறோம்" என்றார்.

APIIT அத்வெல என்பது நாட்டின் முன்னணி வணிக நிறுவனங்களுடனான கூட்டாண்மைகளை வலுப்படுத்தும் திட்டங்களின் முதற்கட்ட ஏற்பாடாகும். இது சமூகத்தில் அர்த்தமுள்ள மற்றும் உறுதியான தாக்கத்தை உருவாக்கும் அதே வேளையில் APIIT Sri Lanka தனது மாணவர்களின் திறமையை மேம்படுத்துவதற்கும் இத்திட்டம் உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழக விஜயம் மறக்கமுடியாதது

## மோடி ருவிற்

சென்னை, மே 28
'தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி' என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.
தமிழகத்தில் 36 ஆயிரம் கோடி மதிப்பிலான மத்திய அரசின் திட்டங்களைப் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்தார்.
இதற்காக ஒருநாள் பயணமாக நேற்றுமுன்தினம் சென்ற பிரதமர் மோடியை முதலமைச்சர் மு.க.ஸ்டா லின், ஆளுநர் ஆர். என்.ரவி, எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி மற்றும் அமைச்சர்கள் எனப் பலர் வரவேற்றனர்.
நேரு உள்விளையாட்டு அரங்கம் செல்லும் வழியில் காரில் நின்றவாறு மக்கள் மற்றும் தொண்டர்களைப் பார்த்து பிரதமர் மோடி கையசைத்தார்.
இந்தநிலையில், தமிழக வருகை குறித்து பிரதமர் மோடி ருவிற்றர் பதிவொன்றை இட்டுள்ளார்.
அதில், "நன்றி தமிழ்நாடு, தமிழகத்துக்கான வருகை மறக்க முடியாதது" என்று பதிவிட்டுள்ளார்.
(ச-இ)

# போதைப்பொருள் வழக்கு; ஷாருக்கான் மகன் விடுவிப்பு

புதுடில்லி, மே 28
போதைப்பொருள் கடத்தல் வழக்கில் கைதாகிய ஷாருக்கானின் மகன் ஆர்யன் கான் உள்ளிட்ட 5 பேர் போதிய ஆதாரம் இல்லாமையால் விடுவிக்கப்பட்டுள்ளனர் என போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.
மும்பையில் கடந்த ஆண்டு போதைப்பொருள் கடத்தல் வழக்கில் நடிகர் ஷாருக்கானின் மகன் ஆர்யன்கான் உள்ளிட்ட ஐவரைப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்தனர். 25 நாள்களின் பின் ஷாருக்கான் மகனுக்குப் பிணை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக் கது.
(ச-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம்
10 - 09 - 2016

மறைவு
27 - 05 - 2022

## பரசுதன் - யோவிதா

இராமலிங்கம் வீதி, உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரசுதன் யோவிதா 27.05.2022 வெள்ளிக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.
அன்னார் பரசுதன்-கௌசிகா தம்பதியினரின் பாசமிகு மகளும், பிரியங்கா, பிரித்திகா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் குலநாயகம்-அன்னலட்சுமி தம்பதிகள், கருணாகரன்-சுபாராணி தம்பதிகள் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை 29.05.2022 ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இராமலிங்கம் வீதி,
உடுவில், சுன்னாகம்.
077 069 8131

தகவல்: குடும்பத்தினர்



# சிலியில் உலகின் பழமையான மரம்

சிலி, மே 28
சிலி நாட்டில் உலகின் மிகவும் பழமையான மரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
நான்கு மீற்றர் தடிமனான தண்டுகளுடன் சைப்ரஸ் வகையைச் சேர்ந்த இந்த மரம் 5ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலானதாக இருக்கலாம் என விஞ்ஞானிகளால் கண்டறியப் பட்டுள்ளது.
உலகின் மிகப்பழமையான மரம் என்று ஆய்வாளர்கள் கணக்கிட்டுள்ள நிலையில் தற்போது மரத்தைப் பாதுகாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
ச-இ)

# எரிபொருள்களின் விலை பாகிஸ்தானில் உயர்வு

இஸ்லாமாபாத், மே 28
பாகிஸ்தானில் பெற்றோல், டீசல் விலை உள்ளிட்ட எரிபொருள்களின் விலை லீற்றருக்கு 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என ஷபாஸ் ஷெரீப் அரசு அறிவித்துள்ளது.
அதன்படி பாகிஸ்தான் ரூபாய் மதிப்பில் ஒரு லீற்றர் பெற்றோல் விலை 179 ரூபாவாகவும் டீசல் ஒரு லீற்றர் 174 ரூபாவாகவும் மண்ணெண்ணெய் விலை ஒரு லீற்றர் 155 ரூபாவாகவும் உயர்வடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.
இந்த நிலையில், எரிபொருள்கள் விலை உயர்வுக்கு பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் பெரும் பணவீக்கத்தை சந்திக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.
(ச-இ)



# ஈரானில் கட்டட விபத்து; 19 பேர் உயிரிழப்பு



தெஹ்ரான், மே 28
ஈரான் அபாடான் நகரில் ஏற்பட்ட கட்டட விபத்தில் சிக்கி 19 பேர் உயிரிழந்துள்ளனர்.
ஈரான் நாட்டின் தென்மேற்கு நகரமான அபாடானில் உள்ள 10 மாடிக் கட்டடம் ஒன்றே திடீரென இடிந்து வீழ்ந்துள்ளது.
இந்தக் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி 19 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் இடிபாடுகளில் 80 பேருக்கும் அதிகமானோர் சிக்கியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.
தீயணைப்புப் படை மற்றும் ஹெலிகொப்டர்களின் உதவியுடன் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த விபத்தில் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப் படுகிறது.
இந்தச் சம்பவம் தொடர்பில் கட்டடத்தின் உரிமையாளர் மற்றும் ஒப்பந்தகாரர் ஆகியோர் அந்த நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
(ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்கள் செயல் இன்று பகல் வரை இழுபறியாகவே இருக்கும். சங்கடங்கள் என்ற நிலை மாறி நன்மையை காண்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றிபெற கூடுதல் கவனம் தேவை.

**இடபம்:** இன்று மதியம் வரையில் நீங்கள் நினைத்த காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். நீங்கள் நினைத்ததை நடத்தி முடிக்க நண்பர்கள் துணை புரிவார்கள்.

**மிதுனம்:** இன்று இழுபறியாக இருந்த முயற்சி மாலையில் நிறைவேறும். கொடுத்தவாக்கைநிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சியான நாள். உங்கள் முயற்சியில் முன்னேற்றம் உண்டாகும்.

**கடகம்:** இன்று மதியத்துக்குப்பின் உங்கள் செயல்கள் இழுபறியாகும். உங்கள் முயற்சிகளில் கவனமும், வார்த்தைகளில் நிதானமும் தேவை. வேலைப் பளு அதிகரிக்கும்.

**சிம்மம்:** குடும்பத்தில் உண்டான குழப்பங்கள் விலகும். அலுவலில் இருந்த நெருக்கடிகள் நீங்கும். நிம்மதியான நாள். மனதில் இருந்த பிரச்சினை விலகி முடிவுக்கு வருவீர்கள்.

**கன்னி:** ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். இழுபறியாக இருந்த முயற்சிகள் வெற்றியாகும். உங்கள் முயற்சிக்கு குடும்பத்தினரின் ஆதரவு உண்டாகும்.

**துலாம்:** வழக்கமான செயல்களில் கூடுதல் முயற்சி தேவை. உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டி இருக்கும். நினைத்துமுயற்சித்த செயலில் அனுகூலம் உண்டாகும்.

**விருச்சிகம்:** இன்று நீங்கள் நினைத்த செயலில் வெற்றி அடைவீர்கள். உறவினர்ஒருவர்மூலம்லாபம்உண்டாகும். நட்பு வட்டம் விரியும். உங்கள் குடும்பத்தில் இன்று மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு:** நேற்றில் இருந்த நெருக்கடி விலகும். அமைதியான நாள். இன்று மாலை வரை பொறுமையுடன் செயற்படுங்கள். இன்று மாலையில் நீங்கள் நினைத்தசெயலில்நன்மைஉண்டாகும்.

**மகரம்:** இன்று உற்சாகமாக செயற்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். உறவினர் ஒருவரால் சில சங்கடங்கள் ஏற்பட்டு மறையும். விழிப்புணர்வுடன் செயற்பட்டு நன்மையை அடைவீர்கள்.

**கும்பம்:** உங்கள் விருப்பம் நிறைவேறும். மகிழ்ச்சி கூடும் நாள். புதிய தொழில் தொடங்குவதற்கான முயற்சியில் ஈடுபடுவீர்கள். நட்பு வட்டம் விரியும். நிம்மதி அடைவீர்கள்.

**மீனம்:** சுறுசுறுப்பாக செயற்பட்டு நினைத்ததை முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். எதிர்பார்த்த மகிழ்ச்சியை அடைவீர்கள். இன்று உங்கள் செயலில் வெற்றியைக் காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் போக்குவரத்து நெரிசலால் நாளாந்தம் 500 மில்லியன் ரூபா இழப்பு

**கொழும்பு, மே 28**

**அண்மைக்காலமாக கொழும்பில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் காரணமாக, நாளாந்தம் 400 முதல் 500 மில்லியன் ரூபா வரை நஷ்டம் ஏற்படுகின்றது என்று மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் போக்குவரத்து மற்றும் விநியோக முகாமைத்துவ பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் அமல் குமாரகே தெரிவித்துள்ளார்.**

போக்குவரத்து நெரிசல் காரணமாக எரிபொருள் விரயம் ஏற்படுகின்றது.

உழைக்கும் மக்கள் வேலை செய்யும் வீதிகளை மறிப்பதால் பொருளாதார இழப்பு ஏற்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வீதி, கண்டி வீதி, காலி வீதி, ஹைலெவல் வீதி, ஹொரண வீதி, தெமட்டகொட - வெல்லம்பிட்டிய வீதி, நாவல - நாரஹேன்பிட்டி வீதி, ஒறுகொடவத்தை - அம்பத்தளை வீதி, கீரிமண்டல மாவத்தை, ஹெக்கிட்டா - மட்டக்குளிய வீதி, லோலெவல் ஆகியவற்றின் ஊடாக கொழும்பு நகருக்குள் வாகனங்கள் பிரவேசிக்கின்றன.

இவற்றில் பெரும்பாலான வாகனங்கள் காலி வீதி, கண்டி வீதி, நீர்கொழும்பு வீதி மற்றும் ஹைலெவல் வீதி வழியாக கொழும்புக்குள் பிரவேசிக்கின்றன.

மோட்டார் சைக்கிள்கள் உட்பட சுமார் 9 இலட்சம் வாகனங்கள் இந்த வீதிகள் ஊடாக நாளாந்தம் கொழும்புக்குள் பிரவேசிக்கின்றன.

இவற்றில் 3 இலட்சத்து 14 ஆயிரத்து 231 கார்கள் மற்றும் ஜீப்புகள், 2 இலட்சத்து 40 ஆயிரத்து 756 முச்சக்கரவண்டிகள், 2 இலட்சத்து 11 ஆயிரத்து 320 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 28 ஆயிரத்து 989 வான்களும் உள்ளடங்குகின்றன.

அத்துடன் நாளாந்தம் கொழும்புக்குள் நுழையும் பேருந்துகளின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 634 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## எரிபொருள் விநியோகத்தை சீராக்க புதிய செயலி அறிமுகம்

கொழும்பு, மே 28

எரிபொருள் விநியோகம் தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள செயலி தற்போது பல இடங்களில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்களைக் கண்காணிக்கவும், நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிலையங்களுடன் நிகழ்நேரத் தரவுகளைப் பகிரவும் இந்தச் செயலி பயன்படுத்தப்படவுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் கொள்வனவுக்காக வரும் வாகனத்தின் இலக்கத்தகடு இந்தச் செயலியில் உள்ளீர்க்கப்படும். இந்தத் தரவு பின் ஏனைய வாகனப் பயன்பாட்டாளர்களுடன் நிகழ்நேரத்தில் பகிரப்படும்.

இலக்கத்தகடு விவரம் உள்ளீடு செய்தவுடன் அதேவாகனம் ஒரே நாளில் வேறு எந்த நிலையத்திலிருந்தும் எரிபொருளை நிரப்பியிருந்தால் அதனை இந்தச் செயலி மூலம் அறியக் கூடியதாக இருக்கும் என வலுசக்தி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் செயலியை இலங்கைப் பொலிஸ் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஆகியவை இணைந்து உருவாக்கியுள்ளன. (ச-இ)

## வெளிநாடுகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு நிதி நெருக்கடி

### அனுமதி மறுக்கும் பல்கலைக்கழகங்கள்

கொழும்பு, மே 28

இலங்கையின் பொருளாதாரநெருக்கடி காரணமாக, வெளிநாட்டுப்பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைத் தொடரும் இலங்கை மாணவர்கள் நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இலங்கையில் அத்தியாவசியப்பொருள்கள் உள்ளடங்கலாக அனைத்துப்பொருள்களினதும் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. இதன்விளைவாக மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக டொலருக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டின் காரணமாக, இங்கிருந்து வெளிநாடுகளுக்குப் பணம் அனுப்புவதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில் வெளிநாட்டுப்பல்கலைக்கழகங்களில் தமது பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்கள் அந்தக் கற்கைநெறிக்குரிய கட்டணம், தங்குமிடம் மற்றும் உணவு உள்ளிட்ட செலவுகளை சமாளிக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் பிரிட்டனின் பிரபல பல்கலைக்கழகமொன்றில் உயர்கல்வியைத் தொடர்வதற்காக விண்ணப்பித்த இலங்கை மாணவர் ஒருவருக்கான அனுமதி வழங்கலை, அந்தப் பல்கலைக்கழகம் தாமதித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியே அதற்குக் காரணம்.

கற்கைநெறிக்குரிய கட்டணம் உள்ளிட்ட செலவுகளை ஈடுசெய்வதற்கு அவசியமான பணத்தைப் பெறுவதில் நெருக்கடிகள் ஏற்படக்கூடும் என்பதாலேயே அனுமதி வழங்கல் தாமதப்படுத்தப்பட்டுள்ளது என்று அந்தப் பல்கலைக்கழகத்தால் குறித்த மாணவனுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அதேவேளை உயர்கல்வியைத் தொடர்வதற்காகு மேலும் பல வெளிநாட்டுப்பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்துள்ள இலங்கை மாணவர்களுக்கான அனுமதி தாமதப்படுத்தப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தாலும், அங்கு செல்வதற்குரிய நுழைவிசைவும் தாமதப்படுத்தப்படுகின்றன என்று பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (க-இ)

## அரசு சாராத கட்சிகள் முன்வைக்கும் திருத்தங்களை ஏற்றால் 21க்கு ஆதரவு

அரசாங்கத்தில் சாராத கட்சிகள் முன்வைக்கும் திருத்தங்களுக்கு, உரிய பெறுமதி வழங்கினால் 21 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்குவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும், சுயேச்சைக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

21 ஆவது திருத்தத்துக்கு ஆதரிக்கும் அனைத்துத் தரப்பினரின் கருத்துகளையும், பரிசீலித்து இறுதி வரைவு தயாரிக்கப்படும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் சாராத கட்சிகள் முன்வைக்கும் திருத்தங்களுக்கு உரிய பெறுமதி வழங்கினால் நாங்கள் ஆதரிப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## ராஜபக்சவினருக்கு எதிராக போராடிய பிக்கு கைதானார்



கொழும்பு, மே 28

ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராகக் குரல்கொடுத்து வந்த பிக்கு ஒருவர் அம்பாந்தோட்டையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வேகந்தவில ராஹுல ஹிமி எனும் பௌத்த பிக்குவே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு கோத்தா கோ கம போராட்டக்களத்தில் மாத்திரமன்றி அம்பாந்தோட்டையிலும் இவர் ராஜபக்ச ஆட்சிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். இந்த நிலையில் நேற்று மாலை வன்முறைகளைத் தூண்டிய குற்றச்சாட்டின் கீழ் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## கடவுச்சீட்டு ஒளிப்படம் எடுப்பதில் சிக்கல்

கொழும்பு, மே 28

கடவுச்சீட்டுக்கான ஒளிப்படங்களை எடுப்பதில் சிக்கல்நிலை உருவாகியுள்ளதால் பயனர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட மென்பொருள் உரியமுறையில் செயற்படாமையாலேயே இந்தநிலை உருவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கடவுச்சீட்டுக்காக ஒன்லைன் முறையில் ஒளிப்படங்களை எடுக்க முடியாதுள்ளது எனவும் இந்த மென்பொருளின் தொழிற்பாடு 95 வீதம் செயலிழந்துள்ளது எனவும் ஒளிப்பட நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)

## சைக்கிள் இறக்குமதி வரியை நீக்குமாறு அரசிடம் கோரிக்கை

கொழும்பு, மே 28

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக பெரும்பாலானோர் சைக்கிள்களில் தமது போக்குவரத்தை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.


இதனால் சைக்கிள்களின் [illegible] கரித்துள்ளது. சைக்கிள் ஒன்றின் விலை 60 ஆயிரம் ரூபாவை தாண்டிய நிலையில் அதற்கான கேள்வியும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் வீடுகளில் இருந்த பழைய சைக்கிள்களைப் புதுப்பித்து [illegible]த்தும் நட[illegible]யிலும் மக்கள் இறங்கியுள்ளனர். எனினும் சந்தையில் சைக்கிள் உதிரிப் பாகங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதேவேளை சைக்கிள் பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில், சைக்கிள் இறக்குமதியின்போது அறவிடப்படும் வரியை, முன்வைக்கப்படவுள்ள நிவாரண வரவு - செலவுத் திட்டத்தில் நீக்குமாறு சர்வதேச சைக்கிள் ஓட்ட சம்மேளனத்தின் நடுவர் கோரியுள்ளார்.

அத்துடன் சைக்கிள் போக்குவரத்தை ஊக்குவிக்க அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும் என மவுண்டன் சைக்கிள் சங்கத்தின் தலைவர் அமல் சூரியகே தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சட்டத்தரணிகள் சங்கத்துடன் நீதி அமைச்சர் ஆலோசனை

கொழும்பு, மே 28
21ஆம் திருத்தச் சட்டவரைவு தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்துடன் நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ச ஆலோசனை நடத்தியுள்ளார்.
நீதி அமைச்சில் நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பில் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சாலிய பீரிஸ் உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (ஒ-5)

# கொடுப்பனவை பெறாது மக்களுக்கு சேவை

## நிந்தவூர் பிரதேசசபை முன்மாதிரி

**அம்பாறை,மே 28**
**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, நிந்தவூர் பிரதேசசபையின் சகல உறுப்பினர்களும், தமது மாதாந்தக் கொடுப்பனவை விட்டுக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளனர்.**

சபையின் ஆட்சி அதிகாரத்திலிருக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (ஐ.தே.க), ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய மூன்று கட்சிகள் சார்ந்த உறுப்பினர்களும் இது தொடர்பான ஏகோபித்த தீர்மானத்தை எடுத்துள்ளனர். கடந்த வியாழன் நடைபெற்ற மாதாந்த அமர்வில் சபைத் தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் குறித்த தீர்மானத்துக்கான ஆலோசனையை முன்வைத்தார்.
இதன்படி நீடிக்கப்பட்ட சபையின் ஆட்சிக்காலம் முடியும் வரையும் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவை விட்டுக்கொடுத்து, கொடுப்பனவின்றியே மக்கள் சேவையைத் தொடர்வதென உறுப்பினர்கள் ஏகமனதான தீர்மானத்தை எடுத்துள்ளனர். இந்தத் தீர்மானம் தொடர்பில் பிரதமரும், நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (க-30)

## அத்துக்கோரள எம்.பியின் சாரதியை கட்டிவைத்து தாக்கி கொள்ளையிட்ட இருவர் கைது

கொழும்பு, மே 28
கடந்த மே 9 வன்முறைச் சம்பவத்தில் நிட்டம்புவ பிரதேசத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோர் உயிரிழந்தமை தொடர்பில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
சந்தேகநபர்களில் ஒருவர் நிட்டம்புவ பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதான கட்டடத் தொழிலாளி எனவும் மற்றையவர் வரகாபொல பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய தனியார் நிறுவன ஊழியர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.
அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரின் சாரதியை மின்கம்பத்தில் கட்டி வைத்துத் தாக்கியுள்ளனர் என தெரியவந்துள்ளது.
அத்துடன் உயிரிழந்த சாரதியின் மனைவிக்குச் சொந்தமான ஏ.ரி.எம். அட்டையைப் பயன்படுத்தி 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான கையடக்கத் தொலைபேசி உள்ளிட்ட பல்வேறு கொள்வனவுகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது. (ச-இ)

## குமார வெல்கம மீது தாக்குதல்; சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு, மே 28
கடந்த மே 9 வன்முறைச் சம்பவத்தில் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் இருவர் கைதாகியுள்ளனர்.
கொட்டாவ பிரதேசத்தில் வைத்து குறித்த இருவரையும் குற்றப்புலனாய்வுப் பிரிவு கைதுசெய்துள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர் குமாரவெல்கம கடந்த 9ஆம் திகதி கொட்டாவ நெடுஞ்சாலை நுழைவாயில் அருகில் வைத்துத் தாக்கப்பட்டார். அத்துடன் அவர் பயணித்த வாகனமும் சேதமாக்கப்பட்டுத் தீ வைக்கப்பட்டது.
இதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையிலேயே குற்றப்புலனாய்வுப் பிரிவு இரண்டு சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ளது. (ச-இ)



## ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் நீடிக்கப்படாது

கொழும்பு, மே 28
ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் நீடிக்கப்படமாட்டாது என்று அதன் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.
ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான பரிந்துரைகளை ஏற்கனவே தயாரித்துள்ளோம். அந்த அறிக்கை விரைவில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
இந்தச் செயலணியானது 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதியால் ஸ்தாபிக்கப்பட்டது. மீண்டும் இந்த வருடம் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி பதவிக்காலம் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. அதற்கமைவாக எதிர்வரும் 28ஆம் திகதி பதவிக்காலம் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## கோத்தா கோகமவில் இன்று மெழுகுவர்த்திப் போராட்டம்

கோத்தா கோ கமப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 50 நாள்களை முன்னிட்டு, இன்று முற்பகல் பத்து மணிக்கு சுதந்திர சதுக்கத்தில் மெழுகுவர்த்தி ஏந்திப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்கு இணையாக கோத்தா கோ கமவிலும், பண்டாரநாயக்க சிலை அருகிலும் மெழுகுவர்த்தி ஏந்தும் போராட்டம் நடைபெறும்.
'நாட்டுக்காக மெழுகுவர்த்தி ஏந்துவோம்' என்ற தலைப்பிலான இந்தப் போராட்டத்தில் கோத்தா கோ கமவுக்கு ஆதவரளிப்போர் கலந்து கொள்வர்.
இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்வோர் தேசி



யக்கொடி மற்றும் 21ஆம் திருத்தச் சட்டம் தொடர்பான பதாகைகளுடன் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-இ)

# இலங்கை பல நாடுகளை ஏமாற்றியதால் உதவிகளைப் பெறுவது சாத்தியமில்லை

## சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, மே 28
இலங்கை பல நாடுகளிடம் கடன்களைப் பெற்று ஏமாற்றியுள்ளது. அதனால், வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்க முடியாது என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்ட வேளையில், பிரதமர் பதவியை பெற்றுக்கொள்ளத் தகுதியானவர்கள் பலர் கோரிக்கைகளை முன்வைத்து பேச்சுக்களை நடத்திக்கொண்டு இருந்த வேளையில், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பொறுப்பேற்றார். அவரைப் பாராட்ட வேண்டும். [illegible]
ரணில் விக்கிரமசிங்க [illegible] தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும். அதற்கு முதலில் சகலரது ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொள்ளும் விதமாக, சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்க வேண்டும்.
ரணில் எப்படியும் சர்வதேச நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொண்டு எம்மை இந்த [illegible] சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தையும் முன்னெடுப்பார்.
கடன் மீள்கட்டமைப்பு விடயங்களையும் முன்னெடுப்பார் என்று நம்புகின்றேன். ஆனாலும் இவை அனைத்துமே தவறினால், அடுத்ததாக என்ன செய்வது என்பது குறித்து சிந்திக்க வேண்டும்.
ஜப்பானுக்கு மூன்றரை பில்லியன் டொலர், சீனாவுக்கு 7 பில்லியன் டொலர், இந்தியாவுக்கு 4 பில்லியன் டொலர் எனக் கடனைச் செலுத்தாது ஏமாற்றியுள்ளோம். ஆகவே எந்த நாடும் எதிர்பார்க்கும் உதவிகளை வழங்கப்போவதில்லை. -என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 9 வன்முறை சம்பவம்; கைதாவோரில் பாரபட்சம்

## தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் கவலை

**கொழும்பு, மே 28**

**நாட்டில் தற்போது ஜனநாயகம் மற்றும் சட்டஆட்சி என்பவற்றில் பெரும் சீர்குலைவு நிலை ஏற்பட்டுள்ளது எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் கவலை வெளியிட்டுள்ளது.**

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டு இவ்வாறு தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

கடந்த மே 9 நாட்டில் பல பாகங்களிலும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் குற்றமிழைத்தவர்கள் தொடர்பான புலன் விசாரணைகள் மற்றும் கைது என்பன அரசியல் செல்வாக்கின் கீழ் நடைபெறுகின்றன எனத் தெரியவருகின்றது. வன்முறைகளுடன் தொடர்புள்ளோர் தெளிவான ஆதாரங்கள் இன்றிக் கைது செய்யப்படுகின்றனர்.

வன்முறைச் சம்பவத்தன்று ஏறாவூரில் ஒன்றுதிரண்ட மக்கள் கூட்டம் ஒன்றின் ஒளிப்படத்தில் காணப்பட்டார் என்ற குற்றச்சாட்டில் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் 16 வயதுடைய மாணவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு 23ஆம் திகதி திங்கட்கிழமையன்றே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆயினும் மே 9 அன்று 'மைனா கோ கம' மற்றும் 'கோத்தா கோ கம' ஆகிய இடங்களில் வன்முறைகளை முன்னெடுத்தோரை காணொலி மற்றும் சாட்சியங்கள் இருந்தபோதிலும் பொலிஸ் தரப்பு அவர்களைக் கைதுசெய்வதில் தயக்கம் காண்பித்துள்ளது.

'கோத்தா கோ கம' தாக்குதல் தொடர்பில் முறைப்பாடுகளைச் செய்த நேரிற் கண்ட சாட்சிகளான அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் மற்றும் ஏனைய பலரினதும் வெளிநாட்டுப் பயணங்களை இடைநிறுத்துவதற்கான நீதிமன்ற கட்டளையை சட்டமா அதிபர் திணைக்களம் பெற்றுள்ளது. ஆனால், அவர்கள் அனைவரும் கட்சி சார்பற்ற மக்கள் போராட்டங்களின் தீவிரமான ஆதரவாளர்கள் மட்டுமேயாவர்.

இதன்மூலம் ஆளுங்கட்சி அரசியல்வாதிகளுக்கு சார்பான வகையில் பிரதேச பொலிஸ் நிலையைப் பொறுப்பதிகாரிகளின் அரசியல் பக்கச்சார்புநிலை நன்கு புலப்படுகிறது. இந்த நிலையில் சமூகத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் மற்றும் சட்டத்தின் ஆட்சியையும் உறுதிப்படுத்த சுயாதீனமாகவும் பொறுப்புக் கூறும் தன்மையுடனும் செயலாற்ற அனைத்து நிறுவனங்களையும் வலியுறுத்துகிறோம்.

அடிப்படை உரிமைகளை மீறி பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக சட்டத்துக்கு முரணான வகையில் செயற்படும் உத்தியோகத்தர்களுக்கு எதிராகப் பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சு ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

### தென்மராட்சியில்

## 10,000 க்கும் மேற்பட்டோருக்கு தமிழக உதவிப் பொருள்கள்

சாவகச்சேரி, மே 28

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொருண்மியம் நலிந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு தமிழக அரசின் உதவிப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கமைய பொருள்கள் வழங்குவதற்கு குடும்பங்களின் விவரங்கள் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்களால் திரட்டப்பட்டு வருகின்றன. தென்மராட்சியில் 23 ஆயிரத்து 460 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் முதற்கட்டமாக பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (ஒ-14,9)

## மாதர் சங்கங்களுக்கு உதவிப் பொருள்கள்

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 மாதர் சங்கங்களுக்கு உதவிப் பொருள்கள் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று வழங்கப்பட்டன. புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் யாழ். மாவட்டக் கிளையால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இதற்கமைய ஒரு தொகைக் காசோலையும் சங் கத்துக்குத் தேவையான தையல் இயந்திரம், தளபாடங்கள், மற்றும் மடிக்கணினிகள் என்பன மாவட்டச் செயலர் தலைமையில் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டன. (ஒ-14,9)

# நட்பு நாடுகளின் உதவி இலங்கைக்கு அவசியம்

## சர்வதேச மாநாட்டில் ஜனாதிபதி அழைப்பு



கொழும்பு,மே 28

இலங்கையில் அத்தியாவசிய மருந்துகள், உணவுப்பொருள்கள் விநியோகம் மற்றும் எரிபொருள் இறக்குமதி போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்கு நட்பு நாடுகளின் ஒத்துழைப்பு இலங்கைக்கு உடனடியாகத் தேவை என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

ஆசியாவின் எதிர்காலம் என்ற தலைப்பில் 27ஆவது சர்வதேச மாநாட்டில் அவர் ஆற்றிய உரை தொடர்பான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த ஏழு தசாப்தங்களாக இலங்கைக்கும், ஜப்பானுக்கும் இடையிலான வலுவான நட்புறவையும், நீண்டகால வரலாற்று மற்றும் கலாசார உறவுகளையும் நினைவு கூருகின்றேன்.

நீண்டகால சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு கணிசமான அளவு ஒத்துழைப்புகள் மற்றும் நிதி உதவிகளை வழங்குவதன் மூலம் இலங்கைக்கு ஜப்பான் எப்பொழுதும் முக்கிய அபிவிருத்தி ஒத்துழைப்புப் பங்காளியாக இருந்து வருகின்றது.

கடந்த சில மாதங்கள் இலங்கைக்கு மிகவும் கடினமாக இருந்தது என்பது இரகசியமல்ல. நாம் தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றோம், இது அனைத்து இலங்கையர்களின் வாழ்க்கையையும் பாதித்துள்ளது. இது சமூக அமைதியின்மைக்கும் வழி வகுத்துள்ளது.

சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட மந்தநிலை மற்றும் கொரோனா காரணமாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடமிருந்து பணம் அனுப்புவதில் கடுமையான வீழ்ச்சி மற்றும் இலங்கையின் அதிக கடன் சுமையுடன் இணைந்த பிற நிகழ்வுகள் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக பணவீக்கம் அதிகரித்து வருகின்றது.

சர்வதேச நாணய நிதியத்துடன் பொருத்தமான வேலைத்திட்டத்துக்கான அணுகுமுறைக்கு இணங்க, எமது கடன் வழங்குநர்களுடன் கலந்தாலோசித்து, வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைக்கும் அபிப்பிராயத்துடன், இலங்கை ஏப்ரல் மாதத்தில் "கடனைத் திருப்பிச் செலுத்துவதை நிறுத்திவைத்தல்" தொடர்பான அறிவித்தலொன்றை விடுத்தது.

இந்த முயற்சிக்கு இணங்க, புதிய பிரதமரையும், பல்வேறு அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரவையையும் நியமித்துள்ளோம். மேலும் முன்னோக்கிச் செல்லும் பாதையில் தேசிய ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு நாடாளுமன்றில் தொடர்ந்து விவாதித்து வருகின்றோம்.

கடன் மறுசீரமைப்பு செயல்முறை முடிவடையும்வரை மற்றும் சர்வதேச நாணய நிதியத் திட்டம் தொடங்கும் வரை, நமது வெளிநாட்டுத் துறையில் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், நமது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் தேவையான நிதியைக் கட்டியெழுப்ப வேண்டிய அவசரத் தேவை எமக்குள்ளது.

எமக்குத் தேவையானபோது ஆதரவளித்துள்ள இந்தியாவுக்கும் நன்றி. அதேபோன்று பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மைக்கான இலங்கையின் முயற்சிகளுக்கு ஜப்பான் ஆதரவளிக்கும் என்று நம்புகின்றோம்.

இக்கட்டான நேரத்தில் எமது நாட்டுக்கு ஆதரவளிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு இங்கு இருக்கும் இலங்கையின் ஏனைய நண்பர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

உணவுப் பற்றாக்குறை மற்றும் அடுத்த சில மாதங்களில் உணவுப் பொருள்களின் விலையின் உயர்வு பல நாடுகளில் குறிப்பிடத்தக்க அழுத்தத்தை ஏற்படுத்தும்.

எனவே, இந்த முக்கியமான பிரச்சினையில் கவனம் செலுத்துவது மற்றும் உள்ளூர் விவசாய உற்பத்திக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம். இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பை அதிகரிப்பதும் அவசியம்.

கடற்கொள்ளை, மனித கடத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத சட்டவிரோத மீன்பிடித்தல் உள்ளிட்ட பல சிக்கல்களையும் எதிர்கொண்டுள்ளோம்.

அதனால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பில் இலங்கை மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்று ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்- என்றுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயக்கமருந்து கொடுத்து நகை திருட்டு: 21 வயது யுவதி கைது!

வவுனியா, மே 28

வவுனியாவில் வயோதிபப் பெண் ஒருவருக்கு மயக்க மருந்து கொடுத்து நகைகளை திருடிய குற்றச்சாட்டில் 21 வயது யுவதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, பண்டாரிக்குளம் நாவலர் வீதியில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவர் சுகயீனம் காரணமாக கடந்த புதன்கிழமை மருந்து எடுப்பதற்காக வவுனியா மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். மருந்து எடுத்து விட்டு குறித்த பெண் மருத்துவமனையில் சிறிது இளைப்பாறி இருந்த போது அங்கு வந்த யுவதி ஒருவர் குறித்த வயோதிபப் பெண்ணுடன் நீண்ட நேரமாக அனுதாபமாக உரையாடி அவர் தொடர்பான தகவல்களை பெற்றுள்ளார்.

உடல் சுகவீனம் என்பதால் தனியாக வீட்டுக்குச் செல்ல வேண்டாம் எனத் தெரிவித்த அந்த யுவதி, முச்சக்கர வண்டி ஒன்றில் வயோதிபப் பெண்ணின் வீட்டுக்கு அழைத்து சென்றதுடன் மயக்க மருந்து கலந்த குளிர்பானத்தையும் பருகக்கொடுத்துள்ளார்.

சிறிது நேரத்தில் முதிய பெண் மயக்கமடைந்ததும், அவர் அணிந்திருந்த சங்கிலி, மோதிரம் மற்றும் வீட்டில் இருந்த நகைகள் என ஏழரைப் பவுண் நகையை திருடிக்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். மயக்கம் தெளிந்த பின்னர் குறிப்பு வயோதிபப் பெண் வவுனியாப் பொலிஸாரிடம் முறையிட்டதையடுத்தே அந்த யுவதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (ம-18)


## கார் விற்பனைக்கு

ALTO 800
CAI xxxxx

077 362 3072

## வேலையாட்கள் தேவை

யாழ். கொழும்பு அதி சொகுசு A/C பஸ் சேவைக்கு பஸ் உதவியாளர்கள் உடன் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

T.P:077 386 6250

## A&A Collaborative Fund (pvt).Ltd
உடனடி வேலைவாய்ப்பு

புதிதாக திறக்கவுள்ள எமது யாழ்ப்பாணம்/ சுன்னாகம் கிளைக்கு Group Loan அனுபவம் உள்ள ஊழியர்கள் கீழ்காணும் பதவிகளுக்கு தேவை.

- Manager
- Cashier
- Marketing Executive
- Trainee Executive

ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்
Cv to be emailed to
carcers@aandacapitalholdings.com

மேலதிக விபரங்களுக்கு
070 699 9445 , 070 399 9422


# நடேஸ் - பிரியா குடும்பம் ஆஸியில் இருக்க அனுமதி

கான்பெரா, மே 29

அவுஸ்திரேலியாவில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த நடேஸ் பிரியா மற்றும் பிள்ளைகள் உள்ளிட்ட குடும்பம் குயின்ஸ்லாந்து நகரத்திற்குத் திரும்புவதற்கான நான்கு ஆண்டுகாலப் போராட்டம் வெற்றி பெற்றுள்ளது.

உலகத்தின் கவனத்தை ஈர்த்த, மிகப் புகழ்பெற்ற இந்த வழக்கில் அவுஸ்திரேலியாவின் புதிய தொழிற்கட்சி அரசாங்கம் நடேஸ் பிரியா குடும்பத்துக்கு நுழைவிசைவு வழங்கியுள்ளது. இதன்மூலம் அவர்கள் தற்காலிகமாக பிலோலாவில் வசிக்கவும் வேலை செய்யவும் விழையேற்பட்டுள்ளது.

வழக்கின் பின்னணி

நடேசலிங்கம் மற்றும் பிரியாவின் புகலிடக்கோரிக்கை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட அதேநேரம் இவர்களுக்கு வழங்கப்பட்ட பிரிட்ஜிங் நுழைவிசைவும் 2018ஆம் ஆண்டு ஆரம்பத்துடன் காலாவதியாகிவிட்டது. இதனையடுத்து அவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளில் அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை இறங்கியது.

கடந்த 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தும் நோக்கில் சிறப்பு விமானமொன்று அவர்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட போதிலும், இறுதி நேரத்தில் குழந்தை தருணிகா சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் நீதிமன்றம் கடைசி நிமிட தடை உத்தரவை பிறப்பித்ததைத் தொடர்ந்து விமானம் திருப்பி அழைக்கப்பட்டு தரையிறக்கப்பட்டது.

இதையடுத்து தருணிகாவின் பாதுகாப்பு குறித்தும், தருணிகாவின் சூழ்நிலைகளை உள்துறை அமைச்சர் மதிப்பீடு செய்திருக்க வேண்டுமா என்பது குறித்தும் விசாரணை மேற்கொண்ட நீதிமன்றம், பிரதான விண்ணப்பதாரியான தருணிகாவின் விண்ணப்பம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் இவ்விசாரணை முடியும் வரை அவர் நாடுகடத்தப்படக்கூடாது எனவும் உத்தரவிட்டது.

தருணிகா குழந்தை என்பதால் பெற்றோரை அவரிடமிருந்து பிரித்து நாடுகடத்த முடியாது என்பதால் முழுக்குடும்பமும் நாடுகடத்தலிலிருந்து தப்பித்து தொடர்ந்தும் சட்டப்போராட்டத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


## கைலாசபிள்ளையார் கும்பாபிஷேகம் பற்றிய நிர்வாக சபை பொதுக் கூட்டம் தொடர்பான கைலாச பிள்ளையார் இந்து இளைஞர் சங்கத்தின் வேண்டுகோள்

எமது ஆலயம் ஆனது கடந்த 5 வருடத்திற்கு முன் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் தொடர்ச்சியாக இழுபறி நிலையில் காணப்படுவது அனைவரும் அறிந்ததே...

தற்போது நிர்வாக சபையினரால் நீதிமன்ற கட்டளையுடன் திருப்பணி வேலைகள் விரைவாக நடைபெற்ற வண்ணம் உள்ளது. இதன் தொடர்ச்சியாக மகா கும்பாபிஷேகம் நடாத்தப்பட வேண்டி யுள்ளது. இது தொடர்பான விடயங்களை கைலாச பிள்ளையார் அடியார்களுடன் கலந்து ஆலோசிப்பதற்காக பொதுக்கூட்டம் ஆனது இன்று (28.05.2022) சனிக்கிழமை மாலை 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கைலாச பிள்ளையார் கோவிலின் முன்னேற்றத்தையும் அடியவர்களின் ஒற்றுமைக்கும் இடையூறாக இருப்பவர்களின் செயல்களுக்கு துணைபோகாது உங்களின் மேலான பங்களிப்பாக இக்கூட்டத்திற்கு வருகை தந்து எமது தொண்மை மிகுந்த கைலாச பிள்ளையாரின் மேன்மையையும் கீர்த்தியையும் மீட்டெடுக்க விரும்பும் அடியவர்களாக கைகோர்ப்போம்.

நன்றி

கைலாச பிள்ளையார்
இந்து இளைஞர் சங்கம்

## யோகசுவாமிகளின் 150 ஆவது ஜெனன தின பூசைவழிபாடு

இடம் : யோகசுவாமிகள் சமாதிக் கோயில்,
கொழும்புத்துறை.

காலம் : 29.05.2022 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 மணி

யோகசுவாமிகளின் 150 ஆவது ஜெனன தின பூசை சுவாமிகள் வாழ்ந்து சமாதி கூடிய கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் 29.05.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சுவாமிகளின் அணுக்கத் தொண்டர் ஒருவர் சுவாமிகளின் வாழ்வு பற்றியும், சுவாமிகளுடன் தனது நேரடி அனுபவங்கள் பற்றியும் எழுதிய நூல் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

அடியவர்கள் இப்பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டு குருவருளையும், திருவருளையும் பெறும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகம்,
யோக சுவாமிகள் சமாதிக் கோயில்,
கொழும்புத்துறை.

(cs36007) (2.6)

## இலங்கை மின்சார சபையில் 39 வருடங்கள் அரிய நற்பணியாற்றி சாவகச்சேரி மின்பாவனையாளர் சேவை நிலையத்தில் இருந்து "மணிவிழா" காணும் "மின்பாதையாளர்"

உயர்திரு. நடேசபிள்ளை ஸ்ரீமுரளீதரன்
அவர்களுக்கு




மங்கள மணிவிழா வாழ்த்துக்கள்

இன்முகமாய் வரவேற்று இடரறிந்து குறைகளைவாய்
ஏமாற்றுக் காரருக்கு எதிரும் ஆவாய்!
வன்மையுறு சடாட்சர மூர்த்தி, அன்ரன், இராகுலனும்
கமலகோபனும் போற்றும் துணைவன் ஆனாய்!
தென்மராட்சியுனை அறியும் புகழ்பாடும்!
திசையெல்லாம் மணிவிழா வாழ்த்து நல்கும்!
இன்னமும் நீ சில ஆண்டு சேவையிலே நீடித்து
செய்க பணி என்றே நாம் வாழ்த்துகின்றோம்
பொன்மகள் மனைவி, மக்கள், மருகர், பேரரொடு
புகழுறவே நூறாண்டு பொலிந்தே வாழ்க!

வாழ்க ! வசந்தம் கமழ்க!

வாழ்த்துவோர்:

சாவகச்சேரி
28.05.2022

சேவை போற்றும் மக்கள் சார்பில்
கவிஞர் த.நாகேஸ்வரன்

## மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 09 . 1935



இறப்பு 25 . 05 . 2022

### சோமநாதர் கந்தையா கனகசபை

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி - வட்டக்கச்சி, சில்வா வீதியிலும் பின் ஆனந்தபுரம், கிளிநொச்சியிலும் (புவனா ஸ்டோர்ஸ்) தற்பொழுது இல. 1594, 4 ஆம் குறுக்கு வீதி, இரத்தினபுரத்தில் வசித்து வந்தவருமாகிய கந்தையா கனகசபை கடந்த (25.05.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமநாதர் கந்தையா - கந்தையா தங்கமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வரும், புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ஆறுமுகம் சுப்பிரமணியம் - சுப்பிரமணியம் கனகம்மா (ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி) தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணி (லண்டன்), லீலாதேவி (இரத்தினபுரம்), சுசிலாதேவி (திருவையாறு), நகுலநாதன் (கேரளா), கேதீஸ்வரன் (லண்டன்), நந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ராக், திருநாகேஸ்வரன் (இரத்தினபுரம்), லோகேஸ்வரன் (திருவையாறு), துளசி (கேரளா), ஈஸ்வரி (லண்டன்), பாலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றர்களான செல்லம்மா, நல்லம்மா மற்றும் தம்பிப்பிள்ளை (கிராஞ்சி), காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சரஸ்வதி, பார்வதி (வட்டக்கச்சி), சின்னப்பிள்ளை (வட்டக்கச்சி), காலஞ்சென்ற அம்பலவாணர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2022) ஞாயிற்றுக் கிழமை இல.1594, 4 ஆம் குறுக்கு வீதி, இரத்தினபுரம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1594, 4 ஆம் குறுக்கு வீதி,
இரத்தினபுரம், கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: மகன் - 077 199 9950
மருமகன் - 076 143 0427

(cr 36019) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



**அன்னை மடியில்** 12.10.1982 **இறைவன் அடியில்** 16.05.2022

## முருகேசு கமலேஸ்வரன்

வவுனியாவைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கமலேஸ்வரன் அவர்கள் கடந்த (16.05.2022) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பொரல்லையைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசு, காளியம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற முருகேசு சிவசுப்பிரமணியம், கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், ராமகிருஸ்ணன் ராஜேந்திரன் அவர்களின் பாசமிகு வளர்ப்பு மகனும், அஜந்தினி அவர்களின் பாசமிகு கணவரும், சுரேஸ்குமார், நளினி, பிரியதர்ஷினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கேதீஸ்வரன், வரதராஜன், ஜேசுதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

**பார்வைக்கு : சனிக்கிழமை மே 28, 05:00 பி.ப - 09:00 பி.ப**
**ஞாயிற்றுக்கிழமை மே 29, 8:00 மு.ப - 10:00 மு.ப**
**கிரியை : ஞாயிற்றுக்கிழமை மே 29, 10:00 மு.ப - 12:00 பி.ப**
**தகனம் : ஞாயிற்றுக்கிழமை மே 29, 12:00 பி.ப**

**Ajax Crematorium and Visitation Centre. 384 Finley Avenue, Ajax, Ontario L1S 2E3 5**

உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இந்த அறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.


**காளியம்மா : +9475 446 2092, கேதீஸ்: 416-873-5780,**
**வரதராஜன் : +447827 318292, அருள் : 437-990-7912, கிருசாந் : 647-403-5406**

**கண்டுவில் ஒழுங்கை,**
**சாவகச்சேரி.**

**தகவல்: திரு.செ.திருச்செல்வம்.**
**077 554 3001**

(CR 8462) 1/6

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 21.07.1950 **மறைவு** 26.05.2022

## சுப்பிரமணியம் திருநாவுக்கரசு

கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் திருநாவுக்கரசு 26.05.2022 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுப்பிரமணியம் சவுந்தரத்தின் மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி ஆறுமுகம் இரத்தினத்தின் மருமகனும் சிவனேஸ்வரியின் (இளைப்பாறிய தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்) பாசமிகு கணவரும் சிந்துஷன் ( Quantity Surveyor - Dubai), கஜானா (M.Phil - University Of Jaffna), காஞ்சனா (Management Assistant - University Of Jaffna) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற வீரசிங்கம் சிவமணி, சுப்பிரமணியம் கந்தசாமி, சிவப்பிரகாசம் வள்ளியம்மை, சுப்பிரமணியம் சிவகாமிப்பிள்ளை மற்றும் வரதராஜா சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரனும் கமலேஸ்வரி, சிவானந்தன், யோகானந்தன் (கனடா), பரமேஸ்வரி (கனடா), குகனேஸ்வரி (நெதர்லாந்து), நித்தியானந்தன் (கனடா), இரத்தினேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற விஜயசுந்தரம் மற்றும் சாரதாதேவி, சந்திரா (கனடா), கங்காதரமூர்த்தி (கனடா), சுந்தரபாண்டியன் (நெதர்லாந்து), உதயா (கனடா), வித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் முத்தட்டு ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (29.05.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு முற்பகல் 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்


**முத்தட்டுமட ஒழுங்கை,**
**கோண்டாவில் மேற்கு**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 205 3395, 077 766 3257**

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை புவனேந்திரன்

**(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர்-யாழ். போதனா வைத்தியசாலை)**



தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை புவனேந்திரன் அவர்கள் நேற்று (27.05.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லத்துரை ஆச்சிமுத்து தம்பதியரின் இளைய புத்திரனும், பேபிகமலா (ராணி) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற திரு. திருமதி இராசையா- பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலநாதன், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோகிலேந்திரன் (பிரசன்னா- லண்டன்), ஸயந்தன் (கொமர்ஷல் வங்கி- சுன்னாகம் கிளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றோஜிதா (லண்டன்), துஷானி (சட்டத்துறைத் தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகவி, ஐஸ்வர்யா, வியாஸகி, பாவலன், நாவலன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சிங்கரட்ணம், இராஜேஸ்வரி, செல்வராஜா, மதியரட்ணம், றேணுகாதேவி, தங்கராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.663, நாவலர் வீதி,**
**நல்லூர்.**
**021 222 1434, 0777 252 181**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 46)1-6

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



**தோற்றம்** 04 . 07 . 1947 **மறைவு** 29 . 04 . 2022

கடந்த (29.04.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி

## அமரர் திருமதி மகேஸ்வரி சுந்தரலிங்கம்

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (29.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பத்தானை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

(cs.44854) (2.6)

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 28 . 02 . 1957 **மறைவு** 25 . 05 . 2022



## சுப்பிரமணியம் கணேசநாதன் (ஆசாரி)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கணேசநாதன் 25.05.2022 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பவளம்மா தம்பதியினரின் அன்பு புதல்வனும், ஆறுமுகம் கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், பத்மசோதி இன் அன்புக்கணவரும் கஜிந்தா, சஜிந்தன் (கனடா), அனிதா (பிரான்ஸ்) மற்றும் கௌசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், குலேந்திரன், கலைவாணி, முருகதாஸ் (கீதன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்சஜன், சஷ்மிதா, சரண்யா, சுகன்யா, எழில், அஜினி ஆகியோரின் அன்புப் பேரனும் விஜயநாதன் (பிரான்ஸ்), வசந்தமல்லிகா (பிரான்ஸ்), சிறிகாந்தநாதன் (பிரான்ஸ்), ரவிகாந்தநாதன் (கனடா), சாந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (30.05.2022) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**எம்.எஸ்.வீதி**
**கோண்டாவில்**

**தொடர்பு:**
**077 015 1600**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின்

## ஊடகத் தலைவர்களை பதவிவிலக வலியுறுத்து

கொழும்பு, மே 28
அரசாங்கத்தின் அனைத்து அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களின் தலைவர்களை பதவி விலகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இந்த அறிவிப்பை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.
இதற்கிடையே, சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் தலைவர் நிரோஷன் பிரேமரத்ன தனது ராஜினாமா கடிதத்தை கையளித்துள்ளார் என்றும் தெரியவருகின்றது. (ம)

### அரச...

அரச அலுவலர்களின் ஊதியம் அதிகரிக்கப்படவுள்ளது என்று ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் அண்மைக்காலமாக செய்திகள் வெளிவரும் நிலையிலேயே பிரதமரின் ஊடகப்பிரிவு இவ்வாறு தெரிவித்துள்ளது.
அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிக்க பிரதமர் எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை. எனினும், எதிர்வரும் இடைக்கால பாதீட்டுத் திட்டத்தில் சுகாதாரம் மற்றும் கல்வி தவிர்ந்த ஏனைய அமைச்சுக்களின் ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டு நிவாரணம் வழங்கப்படும் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம)

### விமலின்...

தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
போலி ஆவணங்களைக் கொண்டு கடவுச்சீட்டு தயாரித்த குற்றச்சாட்டில் சஷி வீரவன்சவுக்கு எதிரான வழக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே சஷி வீரவன்சவுக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன் ஒரு லட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.
எனினும், இந்த உத்தரவுக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு சஷி வீரவன்ஸ முடிவுசெய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### எரிவாயுப்....

தளிக்கப்படும் என்று யாழ். மாவட்டச் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான அறிவிப்பில் உள்ளதாவது:
பொதுமக்கள் தமது கிராம அலுவலர் பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள விநியோகத்திடம் எரிவாயு சிலிண்டருக்கான பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். விநியோகத்தர்களும் மேற்படி விபரங்கள் தொடர்பான பதிவேடு ஒன்றினை பேணுதல் வேண்டும். விநியோகத்தர்களிடம், ஒரு வீட்டுக்கு ஒரு சிலிண்டர் என்ற முன்னுரிமை அடிப்படையில் பதிவு மேற்கொள்ளப்படுவதனை கிராம அலுவலர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். விநியோகத்தர்களுக்கு சிலிண்டர்கள் கிடைக்கப்பெற்றதும் பதிவு அடிப்படையில் அவர்களுக்கான விநியோகம் நடைபெறும். குறித்த நேரத்தில் பதிவு மேற்கொண்டோர் சமூகமளிக்காவிடின் பதிவு அடிப்படையில் அடுத்துள்ள பயனாளிக்கு விநியோகிக்கப்படும். விநியோகிக்கப்பட்ட விபரம் பிரதேச செயலக மேற்பார்வையில் குடும்ப பங்கீட்டு அட்டையில் திகதி குறிப்பிடப்பட்டு பதிவு செய்தல் கட்டாயமானது. சிலிண்டரை பெறவருபவர் உரிய கிராம அலுவலர் பிரிவு பங்கீட்டு அட்டை, தே.அ.அட்டையுடன் பங்கீட்டு அட்டையில் பெயருடைய அங்கத்தவர் ஒருவராக இருத்தல் கட்டாயமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

### டெங்குக்...

மாத்திரை வழங்கப்பட்டதையடுத்து அவருக்கு காய்ச்சல் ஓரளவு குணமாகியுள்ளது. எனினும் கடந்த புதன்கிழமை கடுமையான காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து சிறுமி இணுவிலில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்குச் சிகிச்சையளிக்கப்பட்ட போதிலும் அன்றிரவே சிறுமிக்கு காய்ச்சலுடன் வாந்தியும் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். எனினும், சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்று உயிரிழந்தார்.
இறப்புத் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.
யாழ்ப்பாணத்தில் டெங்குக் காய்ச்சலால் சிறுவனொருவன் கடந்த சனிக்கிழமை உயிரிழந்த நிலையில், ஒரு வாரத்துக்குள் டெங்கு நோயால் மற்றொரு இறப்பு பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

### மிருசுவில்...

துக்கு இடமான பொருளொன்று இருப்பதை அவதானித்துள்ளார். இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்கு விரைந்த கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் நீதிமன்ற அனுமதியுடன் கைக்குண்டை மீட்டு செயலிழக்க வைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (அ-ம-125)

### தமிழ்த்...

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவால் முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச 21ஆவது திருத்த வரைவு தொடர்பில் கலந்துரையாடுவதற்கும், அது தொடர்பில் அரசியல் கட்சிகளின் திருத்தங்கள் மற்றும் யோசனைகளை உள்வாங்குவதற்கும் சர்வகட்சி தலைவர்கள் கூட்டத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருந்தார். பிரதமரின் செயலகத்தில் நேற்று இந்தக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, சுதந்திரக் கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சுயாதீன அணிகள், 43ஆம் படையணி உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.
கூட்டத்தில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் தமது கட்சிகளின் யோசனைகள் மற்றும் திருத்தங்களை முன்வைத்தனர்.
'19ஆவது திருத்தச்சட்டத்தில் இருந்த ஏற்பாடுகளை மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே 21ஆவது திருத்தம் அமைய வேண்டும். எனினும், 19 பிளஸ் என்பதற்கு பதிலாக 19 மைனஸ்தான் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை மாறவேண்டும்' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இதன்போது வலியுறுத்தியுள்ளார். அத்துடன், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கான கால எல்லையும் அறிவிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்
அத்துடன், எக்காரணம் கொண்டு இரட்டை குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்றம் வருவதற்கு தடைவிதிக்கும் ஏற்பாட்டில் தளர்வு போக்கை கடைபிடிக்கக்கூடாது என சில கட்சிகளின் தலைவர்கள் இடித்துரைத்துள்ளதுடன், இரட்டை குடியுரிமை உடையவர்கள் அரச நிர்வாகத்தில் உயர் பதவிகளை வகிப்பதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் எனவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.
பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய முன்னணி உள்ளிட்ட வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகள் பங்கேற்கவில்லை. எனவே. அக்கட்சிகளின் யோசனைகளையும் உள்வாங்கி, எதிர்வரும் 3ஆம் திகதி மீண்டும் கூட்டத்தை நடத்தி, 21ஆவது திருத்த வரைவை உறுதிப்படுத்துவதற்கு கொள்கை அளவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

### விவசாய...

தெரிவித்தார் பிரதமர் ரணில்.
அத்துடன், நகரப் பகுதிகளிலும் இனி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.
நாட்டின் உணவு நெருக்கடி தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விவசாயத்துறைப் பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்து நீண்டநேரம் கலந்துரையாடினார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பில் பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:-
உக்ரைனில் இடம்பெற்றுவரும் போர் காரணமாக உலகம் தாங்கமுடியாத நெருக்கடியைச் சந்தித்து வருகின்றது. உரம் மற்றும் கோதுமை என்பனவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இலங்கையின் உணவு விநியோகம் மோசமடையும்.
விவசாயப் பொருள்களின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்வதற்காக அத்தியாவசிய விவசாய விநியோகச்சட்டம் நாடாளுமன்றத்தில் விரைவில் அறிமுகப்படுத்தப்படும். நாடு ஆபத்தான நிலையில் உள்ளது. நாட்டை மீட்டெடுப்பதற்கு ஒருங்கிணைந்த முயற்சி தேவை. உணவுற்பத்தியை அதிகரிக்க நாம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய நடவடிக்கையை பரவலாக்க வேண்டும். நகர்ப் புறங்களிலும் விவசாயத்துக்கு ஏற்ற பகுதிகள் இனங்காணப்பட்டு அவற்றில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார். (அ-ம)

### வடமராட்சிக்கு...

மீனவர்களின் தேவைக்கு முன்னுரிமை வழங்கியே இவ்வாறு வடமராட்சிப் பகுதிக்கு மண்ணெண்ணெய் பகிரப்பட்டுள்ளது. கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் மேற்பார்வையின் கீழேயே மண்ணெண்ணெய் மீனவர்களுக்குப் பகிரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-17)

### மீனவர்களின்...

மீனவர்களுடன் மிகவும் ஆழமாகக் கலந்தாலோசித்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து அறிவிக்கப்படும் என்று தெரிவித்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சோ. சேனாதிராசா.
இந்தியப் பிரதமர் மோடி நேற்றுத் தமிழகத்துக்குப் பயணம் மேற்கொண்டார். அவரிடம், கச்சதீவை மீட்பதற்கு இதுவே பொருத்தமான நேரம் என்று ஸ்டாலின் வலியுறுத்தினார். இது தொடர்பில் கேட்டபோதே மாவை இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இது இரண்டு நாடுகளின் உடன்படிக்கை. இந்த நிலையில் கச்சதீவு எங்களுடைய மீனவர்களின் நலன்களுக்கு சாதகமாக இருக்குமானால் எங்களுடைய மீனவர்களின் நலன்களை முன்வைத்து இந்திய மீனவர்களுடன் பேச்சு நடத்த வேண்டும்.
அதற்கு முன்னதாக கச்சதீவை இந்தியா பொறுப்பேற்க வேண்டும் என்ற தமிழக முதலமைச்சரின் கருத்து தொடர்பில் நாம் முதலில் எங்களுடைய மீனவர்களின் கருத்துகளை அறிய வேண்டும். அவர்களின் கருத்துக்களை ஒட்டியே எங்களுடைய (தமிழரசின்) முடிவுகள் அமையும். அதற்கு முன்னதாக எழுந்தமானமாக கருத்துக்களை கூறமுடியாது - என்றார். (அ-ம-113-214-125)

### இந்தியாவின்...

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் கே.விமலநாதன் ஆகியோருடன் இணைந்து இந்த உதவித்திட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.
இந்த உதவித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் கிலோ அரிசியும் 2 ஆயிரத்து 250 கிலோ பால்மாவும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இதன்மூலம் சுமார் 28 ஆயிரம் குடும்பங்கள் பயனடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### இரு வயோதிபப்...

மூர்த்தி லக்ஷ்மி ( வயது -75) ஆகிய இருவருமே இவ்வாறு சடமலாக மீட்கப்பட்டவர்களாவர்.
இவற்றில் ஒரு சடலம் மிகவும் உருக்குலைந்த நிலையில் உள்ளது. அவர் சுமார் இரு வாரங்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். மற்றையவர் சுமார் 2 நாள்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.
குறித்த வீட்டில் இந்த இரு மூதாட்டிகளுமே வசித்து வந்துள்ளனர். அவர்களுக்கு எவரும் உதவிக்கு இல்லை. மாதாந்த உதவிப் பணத்தைப் பெறுவதற்காக அவர்கள் வரவில்லை என கிராம அலுவலர் வீடுதேடிச் சென்றபோதே இருவரும் உயிரிழந்திருப்பது கண்டறியப்பட்டு பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களின் இறப்புவிசாரணையை வலிகாமம் மேற்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆர்.ஜெயபாலேந்திரன் மேற்கொண்டார். மீட்கப்பட்ட சடலங்கள் யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. (ம-125-26-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டீசல் விலை அதிகரிப்பால் ம.எண்ணெய்க்கு கிராக்கி

## மீனவர்கள் குற்றச்சாட்டு



மன்னார், மே 28
டீசல் விலை அதிகரிப்பால் மண்ணெண்ணெய் கொள்வனவு அதிகரித்துள்ளது. இதனால் மீனவர்களுக்கு போதிய மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்று மன்னார் மாவட்ட மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

கடற்றொழில் செய்யும் நாங்கள் அனைவரும் மண்ணெண்ணெய் மூலமே கடற்றொழிலில் ஈடுபட்டு வந்தோம். ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான காலகட்டத்தில் எரிபொருள் விலையுயர்வு, தட்டுப்பாடு என்பவற்றால் டீசலில் இயங்கிய அனைத்து வாகனங்களும் மண்ணெண்ணெயில் இயங்குகின்றன. இந்த நிலையில் மண்ணெண்ணெய் மூலம் கடற்றொழில் செய்யும் எங்களுக்கு மண்ணெண்ணெய் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் எங்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு தொழிலுக்கு போய் வருவதற்கு சராசரி 60 தொடக்கம் 70 லீற்றர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. இது தொடர்பில் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தினாலும் அவர்கள் கண்டு கொள்வது இல்லை. எமக்கு ஒழுங்கான தொழில் வருமானம் இல்லாமையால் குடும்பத்தை நடத்திச் செல்வதற்காக எங்களுடைய பிள்ளைகளையும் பாடசாலை விடுமுறை நாள்களில் தொழிலுக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

இவ்வாறான சூழலில் பிள்ளை களின் கல்வி கற்கும் மனநிலையும் மாறி விடும். இந்த நிலை தொடராதிருக்க அரசாங்கம் சரியான முறையில் எங்களுடைய தேவைகளை அறிந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ஓ-14,213)

### சேவைநலன் பாராட்டு விழா



சாவகச்சேரி, மே 28
தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் உதவித் திட்ட மிடல் பணிப்பாளராகக் கடமையாற்றி பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற செ.சுபச்செல்வனுக்கு சேவைநலன் பாராட்டு விழா நேற்றுமுன்தினம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது அவருக்கு மாலை அணிவித்து வாழ்த்துமடல் வழங்கி பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு கௌரவித்தது. (ஓ-14,9)

## JCB வாடகைக்கு விடப்படும்

காணி துப்பரவு, காடு அழிப்பு, மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக்கூடிய JCB சாரதியுடன் வாடகைக்கு விடப்படும். (CS 1032) 1-6

077 353 3809, 077 071 3778

## திருமாங்கல்யம் திருமண சேவை

அரச உத்தியோக மணமகன்களுக்கு உள்நாட்டில் மணமகள்கள் தேவை. உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களுக்கு உள்நாட்டில் வெளிநாட்டில் மணமகன், மணமகள் தேவை.

thirumaangalyam.com
077 120 4651, 021 728 4433

## Win Repair

குளிர்சாதனப் பெட்டி பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள் வீட்டிற்கே வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கின்றோம்.

077 964 8942

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஒட்டுமடம் சந்தி முதலாம் ஒழுங்கையில் 12 பரப்பு நெ.ப. காணி விற்பனைக்கு உண்டு. சுற்றுமதிலுடன் அராலி வீதி ஊடாக பாதை உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப் படும்.
1 பரப்பின் விலை 18.லட்சம்.
**பார்வையிடும் நேரம்:- 8.00AM-6.00PM**
தொடர்பு : **076 844 6536, 074 008 9086**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 3 பரப்புக் காணிவிற்பனைக்கு.

- ✓ 1 1/2, 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடம் கிழக்கு எல்லைகள்
- ✓ சமுர்த்தி வங்கி வடக்கு எல்லை.
- ✓ கைதடி சந்தி **200 M** தூரம்
- ✓ வட மாகாண சபை அலுவலகம் 250 மீற்றர் தூரம்.
- ✓ மூன்று வழி பாதையுடன்
  - 01- A-09 வீதி 100 மீற்றர் (16 அடி பாதையுடன்)
  - 02- கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடி பாதையுடன்)
  - 03- சமுர்த்தி வங்கி அருகாமை **100 M** தூரம் (16 அடி பாதையுடன்)
- ✓ சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்
- ✓ செம்மண் காணி.

தொடர்பு: **076 6583 621**
(CS 19743) 1/6

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில்**
**10 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- ❖ A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட்)
- ❖ A9 வீதியுடன் 6 பரப்பும்.
- ❖ A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ❖ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ❖ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும்
- ❖ மருந்தகங்கள் அமைப்பதற்கும் (பார்மசி)
- ❖ அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.


**பார்வையிடும் நேரம் :**
**காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**
தரகர் தேவையில்லை
**தொடர்புகளுக்கு : ஜெய்ம்**
**077 814 7389, 077 241 7589**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 115 பரப்புக் காணி விற்பனைக்கு.

- ✓ A-9 வீதியில் இருந்து இரண்டாவது காணி 100M தூரம்
- ✓ கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100 மீற்றர் தூரம்
- ✓ பல இந்து ஆலயங்கள் சூழ அமைந்துள்ள காணி. நல்ல சூழல் நல்ல தண்ணீர் நிலம்.
- ✓ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 M தூரம்
- ✓ இரு வழி பாதை (1) A-9 பாதை (2) விக்னேஸ்வரா வித்தியாலய வீதி
- ✓ கைதடி சந்தி 500 M தூரம்
- ✓ 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ விலை :
  - முன் பகுதிகள் ஏழு இலட்சம் (1 பரப்பு)
  - நடு பகுதிகள் ஆறு இலட்சம் (1 பரப்பு)
  - பின் பகுதிகள் ஐந்து இலட்சம் (1 பரப்பு)

பார்வையிடும் நேரம் **8AM - 6 PM** வரை




தொடர்பு: **077 6234 204**
**077 2880 152**
**076 4365 814**
(CS 1029) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.